யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி10 ஞாயிற்றுக்கிழமை (27.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 312

நந்தரா

புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்

* ரெடிமேட் ஆடைகள் * ஸ்கேட் அன் பிளவுஸ் * சல்வார் கமிஸ் * நவீன டிசைன் களில் பலரக சாறிகள்
* ஜீன்ஸ் துணிகள் * அழகு சாதனப் பொருட்கள்

போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்வீதி, மானிப்பாய்

# தற்கொலைத் தாக்குதலை கைவிட்டால்
# புலிகளின்தடையை அமெரிக்கா நீக்கும்

## அமெரிக்கப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை கைவிடுவதாக உறுதிப்படுத்துவார்களானால் அமெரிக்கா அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்து சாதகமான முறையில் பரிசீலிக்கும் என்று தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் டொனால்ட் காம்ப் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு விஜயம் செய்தி ருந்த தெற்காசிய விவகாரங்களுக் குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் டொனால்ட் காம்ப் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பிக்களுக்கு நேற்று மதிய போசன விருந்தளித்துக் கௌரவித்தார்.

இவ் விருந்து உபசாரத்திலேயே அவர் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பாக மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் இல்லத்தில் நடைபெற்ற இம் மதிய விருந்துபசா ரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், யாழ் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்கள் கஜேந்திர குமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர். எல்.எவ் செயலாளர் சுரேஷ் பிரே மச்சந்திரன் மற்றும் பொது அமைப் புக்களின் முக்கியஸ்தர்களான

(10ம் பக்கம் பார்க்க)

# அரசியல் நெருக்கடிக்கு தேசிய அரசே தீர்வு

## பௌஸி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிக்கு தேசிய அரசாங்கம் நிறுவுவதே தீர்வாக அமையும் என பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாரா ளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பௌஸி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு உரையாற்றுகையில் தேசிய அர சாங்கம் ஒன்றை அமைப்பதற்கு விடுக்கப்பட்ட அழைப்பு வரவேற் கத்தக்கது என்றும் இதன்மூலமைம் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

அதேவேளை தேசிய அரசு ஒன்று அமையும் பட்சத்தில் தாம் அமைச்சர் பதவியை எதிர்பார்க்கப் போவதில்லை என்றும் பௌஸி கூறியுள்ளார். (த)

## எதிர்வரும் 31ந் திகதி 2ம் கட்டப் பேச்சு

# அரச - புலிப் பிரதிநிதிகள்
# தாய்லாந்து செல்லத் தயார்!

(நமது நிருபர்)

**இம் மாதம் 31ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நவம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவுள்ள இருதரப்பு பிரதிநிதிகளும் 29ம் திகதி செவ்வாய்க்கிழமையும், 30ம் திகதி புதன் கிழமையும் தாய்லாந்துக்குப் பயணமாகவுள்ளனர்.**

தாய்லாந்தின் தலைநகர் பாங் கொங்கில் இருந்து சுமார் 40 கிலோ

வார்த்தை நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் அரச

சானக ஜெயகேரா ஆகியோர் 29ந் திகதி செவ்வாய்க்கிழமை தாய்லா

## கோரிக்கை நிறைவேறும் வரை
## பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு தொடரும்

(கொழும்பு)

எமது கோரிக்கைகளை திருப்தி படுத்தக் கூடிய சாதகமான முடிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தரு வாரானால் எமது பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டு வருவோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தின் மசூர் நேற்று பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நேற்று பிரதமர் ரணில் விக்கிரம் சிங்காவுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் முஸ்லிம்களுக்கான விசேட செயலணி சம்பந்தமாகவும் ஆராயப்படதாக அமைச்சர் நூர்தீன் மேலும் தெரிவித்தார். (ந-5)

## கரைநகர் மீனவர் மின்னல் தாக்கி மரணம்

(காரைநகர்)

காரைநகர் பொன்னாலைக் கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார். மேலும் ஒருவர் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளார்.

நேற்று அதிகாலை 4மணியளவில இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த ஏ.பேரின்பநாதன

## கல்வியற்கல்லூரியில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற்கல்லூரி அனு மதிக்கு கிறிஸ்தவ பாட நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர் முகப்பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

இப்பாட நெறிக்கு விண்ணப்பித்து அழைப்புக்கடிதம் கிடைத்தவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகப்பரீட்

(நமது நிருபர்)

**இம் மாதம் 31ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நவம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவுள்ள இருதரப்பு பிரதிநிதிகளும் 29ம் திகதி செவ்வாய்க்கிழமையும், 30ம் திகதி புதன் கிழமையும் தாய்லாந்துக்குப் பயணமாகவுள்ளனர்.**

தாய்லாந்தின் தலைநகர் பாங் கொங்கில் இருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புறநகர்ப் பகுதியான "நொக்கம் பத்தொம்" நகரத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் 31ந் திகதி இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பு பிரதிநிதிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழுவில் இடம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, சமாதானச் செயல கப் பிரதிநிதிகள் ஜோண் குணரத்ன, சானக ஜெயகேரா ஆகியோர் 29ந் திகதி செவ்வாய்க்கிழமை தாய்லா ந்துக்கு செல்லவுள்ளனர்.

முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்

(10ம் பக்கம் பார்க்க)

## கரைநகர் மீனவர் மின்னல் தாக்கி மரணம்

(காரைநகர்)

காரைநகர் பொன்னாலைக் கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார். மேலும் ஒருவர் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளார்.

நேற்று அதிகாலை 4மணியளவில இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த ஏ.பேரின்பநாதன வயது35 என்பவரே உயிரிழந்த வராவர். (த 243,246)

## கல்வியற்கல்லூரியில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற்கல்லூரி அனுமதிக்கு கிறிஸ்தவ பாட நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

இப்பாட நெறிக்கு விண்ணப்பித்து அழைப்புக்கடிதம் கிடைத்தவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகப்பரீட்சைக்குச் சமூகம் தருமாறு கேட்கப் பட்டுள்ளது. (த-5 )

## ஈழத்துச் சிதம்பரத்தின் கோபுரம் மின்னல் தாக்கிப் பெரும் சேதம்

### நேற்று அதிகாலையில் நடந்தது

(கரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நேற்று அதிகாலை மின்ல் தாக்கியதில் ஆலய கோபுரம் சேதமடைந்துள்ளது.

கலசங்கள், நடராஜர், அம்மன் சிலைகள் கோபுரத்திலுள்ள இரு சிவலிங்கங்கள் உட்பட பல உருவப் பொம்மைகள் சேதமடைந்துள்ளன அத்துடன் கூரை ஓடுகளும் உடைந்துள்ளன.

கடந்த வருடமே பல இலட்சம்ரூபா செலவில் ஆலயக் கும்பாபிஷேகம் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. (த-246,243)

## பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும் முஸ்லிம் எம்.பிகளுடன் பிரதமர் சந்திப்பு

### முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்து வரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் 9பாராளுமன்ற உறுப்பினர்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சந்தித்து பேசிய போது எந்த விதமான இணக்கப்பாடும் காணாத நிலையில் பேச்சு வார்த்தை முடிவுற்றது.

பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபடும் எம்.பிகளுடன் பிரதமர் கலந்துரையாடிய போது கூட்டுச் செயலணி அமைப்பதால் முஸ்லிம்மக்கள் பாதிகப்படுவதாக சுட்டிக்காட்டி முஸ்லிம்களுக்கும் தனியான செயலணிக குழு அமைக்க வேண்டும் என்று கோரினர்.

இக்கோரிக்கைகளுக்கு பதிலளிக்க மறுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வன்னிப் புனர்வாழ்வு

(10ம் பக்கம் பார்க்க)

SERENDIB
விமான சேவை
சிறந்த சேவையின் சின்னம் SERENDIB
கட்டணத்தை சிந்தியுங்கள்...!
இலவச பஸ் சேவை விமான நிலையம் வரை
இரத்மலானை - வெள்ளவத்தை வரை
யாழ்.நகர் - பலாலி வரை
3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயணச்சீட்டு இலவசம்!
SERENDIB - MANO
13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777 - 801038, 021 - 2222007, 0777 - 512648
SERENDIB EXP
500, காலி வீதி, வெள்ளவத்தை
505632, 500626
மனோஜ்
67/A, WOLFENDALL STREET, COLOMBO - 13
074 - 612656, 01 - 390128, 0777 - 517019
[C/5176]

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டமானது எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நல்லூர் இந்து வீதியில் யாழ் மாநகர சபை முதல்வர் செ. யோகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது (உ-6)

★ ★

(மந்திகை)

வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச கால்நடைவளர்ப்பேர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி.ப 2 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது (உ-23)

★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி பி.ப. 4 00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உறுப்புரிமை பெறாத பழைய மாணவர்களும் அன்று கூட்டத்தில் பங்குபற்றி உறுப்புரிமையை பெற முடியும என செயலாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## கல்வியியல் கல்லூரி நேர்முகத் தேர்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2003 ஆம் ஆண்டு பாடநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 4 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-3)

# குடாநாட்டு விவசாயிகளின் நலன் கருதி புதிய விவசாயத் திட்டம் வகுக்கப்படும்

### விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ். அரச அதிபர்

(தென்மராட்சி)

யாழ் மாவட்ட விவசாயிகளின் மேம்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு புதிய விவசாயக் கொள்கைத் திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் செ பத்மநாதன் திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற யாழ் மாவட்டத்தின் சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் வைபவத்தில் குறிப்பிட்டார்.

உதவி விவசாயப்பணிப்பாளர் ச.சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாவட்ட ரீதியில் நெல் உபஉணவு வதிவிட வேளாண்மை ஆகியவற்றில் சிறப்பாக செயற்பட்ட 36 விவசாயிகள் அரச அதிபரால் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது;

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 56 கோடி ரூபா நிதி விவசாயத்திணைக்களத்தினால் செலவிடப்பட்டுள்ளது ஆயினும் கூட விவசாயிகளின் வாழ்க்கைத்தரமோ அல்லது பொருளாதார நிலையோ அபிவிருத்தியடையவில்லை. எமது விவசாயிகள் இன்னமும் அரசாங்கத்தின் உலர் உணவிலேயே தங்கியுள்ளனர்;

இந்த நிலை வேதனைக்குரியது. எமதுவிவசாயிகளுக்கான புதிய கொள்கைத் திட்டம் வகுக்கப்பட வேண்டியது இன்றைய அவசர அவசிய தேவையாகவுள்ளது. இதற்கு திணைக்களத் தலைவர்கள் தமது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்க முன்வர வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய விவசாயச் செயற்பாடுகள் இப்போது ஏனைய மாவட்டங்களுக்கும் பரவியுள்ளன. ஆதலால் இலங்கையின் ஏனைய மாவட்டமக்கள் தமது விவசாய தேவைகளுக்கு யாழ் மாவட்ட விவசாயிகளில் தங்கியிருக்க வேண்டியநிலைப்பாடு இப்போது இல்லாமல்போய் விட்டது எனக் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க சுந்தரேசன் கால் நடை அபிவிருத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர் பொ. இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வு வடக்கு கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் அனுசரணையுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-77)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் 'ILARIAFRECCIA' என்பவர் இயக்கிய அலிகளை பற்றிய ஆவணப்படமான 'MADRAS EYES' என்ற திரைப்படமும், இயக்குநர் அருண்மொழியுடனான நேர்காணல் ஒன்றின் வீடியோப்படத்தொகுப்பும் இன்று மு.ப.10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## நவீன உபகரணங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு 75 நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் அன்பளிப்பாக கிடைத்துள்ளன.

இவ்வுபகரணங்களை அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

போலிக்கடவுச் சீட்டுக்களையும், பிரயாணப்பத்திரங்களையும் கண்டறிவதற்கு இவ்வுபகரணங்கள் உதவியாக இருக்குமெனக் கூறப்படுகின்றது. (உ-8)

## விபத்தில்! இளைஞன் படுகாயம்

சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை சுன்னாகம் சந்தியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் சைக்கிளில் பிரயாணம்செய்த சுன்னாகத்தைச்சேர்ந்த ஐ. குணரதன் (வயது 18) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-5, 6)

## சாரதி அனுமதி பத்திரம் இன்று முதல் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் மீண்டும் இன்று முதல் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென கொழும்பில் இருந்து வாகனப் பரிசோதகர்கள் நால்வர் யாழ் வந்துள்ளனர். (உ)

### ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு

## தேசிய அரசமைப்பதே தீர்வாக அமையும்

### பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதே தீர்வாக அமையும் என்ற தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமையில் தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு விடுத்துள்ள அழைப்பை வரவேற்பதாகவும், அரசியல் காரணங்களை கருத்தில் கொண்டு நாட்டின் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை மேலும் வலுவடையச் செய்யக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். (உ-8)

## பத்திரிகைச் சுதந்திரத்தில் இலங்கை 51வது இடத்தில்

### ஆய்வறிக்கைகள் தகவல்

(கொழும்பு)

பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பாக 'றிப்போட்டர்ஸ்னஸ் கிரண்டி என்னும் அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் இலங்கை 51-வது இடத்தில் உள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பாக இந்த அமைப்பு 139 நாடுகளில் ஆய்வு மேற்கொண்டபோதே இலங்கை 51 வது இடத்தைப் பெற்றுள்ளது.

நோர்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் முதலாவது இடத்தைப் பகிர்ந்துள்ளது.

ஆசியாவிலேயே பத்திரிகைச் சுதந்திரம் மிகவும் பாதிப்படைந்துள்ளது என்று கூறும் இந்த ஆய்வில் வடகொரியா சீனா, பர்மா, பூட்டான் ஆகிய நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் மிகவும்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு அமைப்பு 50 கேள்விகள் அடங்கிய கேள்விக்கொத்துக்கள் பத்திரிகையாளர்கள் ஆய்வாளர்கள், சட்டத்தரணிகள் மத்தியில் விநியோகித்து ஆய்வினை மேற்கொண்டமைகுறிப்பிடத்தக்கது. (ம)

## கல்வியியல்

எஸ் பத்மசீலன் ஜே ஆர். செபஸ்ரியாமபிள்ளை எஸ். சண்முகநாயகம், ஜே சந்திரபிரகாசம், என்,சரவணபவன் கே. சரவணபவன்,

பி சர்வானந்தன், கே சசிதரன், பி சத்தியநாதன்,கே. சத்தியசீலன, ஆர் .சத்தியேந்திரம்பிள்ளை, பி.சற்குணநாதன் ,எஸ் சயந்தன்,கே. செல்வநாயகம், எல்.செல்வநாயகம் ஜி சேதுராசா ,எஸ். சிறிதரன், எம் சின்னையா கே.சின்னராசா, கே சின்னத்துரை,ஆர் சிவகுமார், கே. சிவகுமார், பீ கே.சிவலிங்கம், எவ் ஏ.எஸ். சிவலிங்கம் எஸ். சிவநாதன், எஸ். சிவநேசன், பி. சிவநேசன், என. சிவநேசன், எஸ். சிவபதம். எஸ் சிவராசா, கே. சிவசுப்பிரமணியம், ஜி. சிவசுந்தரம், டீ.எஸ் செல்மன்,பி சிறீதரன், கே. சிறீநந்தவேள், கே. சிறீநந்தகோபன், ரீ சுபாகரன், பி. சுப்பிரமணியம், ஆர். சுப்பிரமணியக் குருக்கள், பி சுந்தரலிங்கம், ரி. தனேஸ்வரன், ரி. தவராசா, எஸ். தயாபரன் (உ-10,3)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் 30ம் திகதி புதன்கிழமை நடத்தப்படவுள்ள வலிவடக்கு விடுவிப்புக்கான போராட்டம் தோடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்றுபிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் மகாவித்திாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வலிவடக்கு தெற்கு பிரதேச செயலர்கள் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆலய பரிபாலனசபைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெங்கு பனம்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் வலிவடக்கு தெற்கு விவசாயிகள் சங்க உறுப்பினர்கள், வலிவடக்கு தெற்கு புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# உண்மையைக் கண்டறிவதற்கு உதவும் ஆவணங்களை ஏற்கமுடியும்

### வலம்புரியின் நேற்றையசெய்திக்குவிளக்கம்

தமிழீழ நீதிமன்றத்தின் வழக்குகளை யாழ். நீதிமன்றிலும் தொடரலாம் என நேற்றைய வலம்புரியின் 10ம் பக்கத்தில் யாழ் மாவட்ட நீதிபதி இ. த. விக்கினராஜா தெரிவித்ததாக வெளிவந்தசெய்தி குறித்து தெளிவான விளக்கம் இங்கு தரப்படுகின்றது.

தமிழீழ நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்று யாழ். நீதிமன்றில் புதிதாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வழக்கு விசாரணையை மேற்கொண்ட நீதிபதி இ. த. விக்னராஜா சில விளக்கங்களை அளித்திருந்தார்;

அவர் அளித்த விளக்கங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட செய்தியில் ஏற்பட்ட மயக்க நிலையை தெளிவுபடுத்துவதற்காக விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கு விபரம் இங்குதரப்படுகின்றது.

நாகமணி இராசநாயகம் என்பவர்; 1988ம் ஆண்டு நாகமுத்து தம்பையாவிடம் ஒருவருட நிபந்தனை அறுதியாக ரூபா 35ஆயிரம் கொடுத்து அவரது காணியை ஈடுபிடித்தார். இதில் ஒரு சாட்சியாக இருப்பவர் நாகமுத்து யோகராசா குறித்த காலப்பகுதியில் பணம் திருப்பிச் செலுத்தப்படாத காரணத்தினால் நாகமணி இராசநாயகம் தமிழீழ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அச்சமயம் சாட்சியாகக் கையெழுத்திட்ட நாகமுத்து யோகராசா நாகமணி இராசநாயகத்திடமிருந்து தானே பணத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் குறித்த 35 ஆயிரம் ரூபாவுக்கும் நாகமுத்து தம்பையாவுக்கும் எந்த விததொடர்பும் இல்லையெனவும் தமிழீழ நீதிமன்றுக்கு கடிதம் ஒன்றைக் கொடுத்திருந்தார்.

1995 இல் ஏற்பட்ட சம்பவங்களை அடுத்து 1997இல் குறித்த நாகமணி இராசநாயகம் யாழ். மாவட்ட நீதிமன்றில் புதிதாக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்;

இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நாகமுத்து யோகராசா மரணித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன், 35 ஆயிரம் ரூபாவைத்தானே பெற்றுக்கொண்டதாக யோகராசா தமிழீழ நீதிமன்றுக்கு எழுதிக்கொடுத்த கடிதத்தின் பிரதியும், தமிழீழ நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணை மற்றும் ஆவணங்களும் எதிர்த்தரப்பால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கு வழக்காளி தரப்புச் சட்டத்தரணி ஆட்சேபம் தெரிவித்தபோது, சான்றுக் கட்டளைச் சட்டத்தின்படி ஒரு நீதிபதியின் கடமை, உண்மையைக் கண்டறிய அந்த வழக்கோடு தொடர்புபட்ட எந்த ஆவணத்தையும் ஏற்பதற்கு அதிகாரம் உண்டு எனத் தெரிவித்து ஆட்சேபனையை நிராகரித்ததுடன் குறித்த ஆவணங்களையும் நீதிபதி இ. த. விக்னராஜா ஏற்றுக் கொண்டார்,

இது தொடர்பான செய்தியில் தமிழீழ நீதிமன்றத்தின் வழக்குகளை யாழ். நீதிமன்றத்தில் தொடரலாம் என தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. எந்த நீதிமன்றத்தின் வழக்குகளையும் இன்னொரு நீதிமன்றில் தொடர்வதற்கு சட்டம் இடம் கொடுப்பதில்லை என்பது சுட்டிக்காட்டுதற்குரியது. (ந)

# நாட்டை மீட்டெடுக்கும் வகையில் சகவாழ்வு அரசியலுக்குத் தயார்!

## இருப்பினும் நிபந்தனைகள் சில போடுகிறார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

**தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொருட்டு சக வாழ்வு அரசியலுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்க முடியும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

மாத்தறை உயன்வத்த விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற புலைமைப்பரிசில் வழங்கும் வைபவத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந் நிபந்தனைகளில் தாய்லாந்து பேச்சுவார்த்தை குறித்து அரசாங்கம் மக்களுக்கு தெளிவாக அறிவிக்க வேண்டும் என்பது பிரதானமானது என்றும்,

மேலும், அரச பயங்கரவாதம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை ஏன் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள பலர் கேள்வி எழுப்பி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசிய கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கி, பாராளுமன்றத்துக்கு முழு அதிகாரத்தை வழங்கும் முறை கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும் விளக்கியதுடன்,

தாய்லாந்துப் பேச்சுக்களின் போது புலிகளுக்கு அரசு எவை எவற்றை வழங்கப் போகின்றது, எவற்றைக் கொடுக்க மறுக்கின்றது என்பவற்றைத் தெளிவாகக் கூற வேண்டும் எனவும் நிபந்தனை விதித்துள்ளார். (உ-8)

## அமைச்சர் டிரோன் இந்தோனேசியா செல்வார்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அடுத்தமாத ஆரம்பத்தில் இந்தோனேசியா செல்லவுள்ளார்.

இந்தோனேசியாவில்பாலித்தீவில் இடம்பெற்ற பயங்கரவாத குண்டுத் தாக்குதல் தொடர்பாக இலங்கையின் அனுதாபத்தை தெரிவிக்கும் முகமாக பிரதமரின் விசேட தூதுவராகவே டிரோன் இந்தோனேசியா செல்லவுள்ளார். (உ-8)

## 300 குடும்பங்களுக்கு வீடமைப்பு கொடுப்பனவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஒல்லிக்குளம், கிரான் ஆகிய பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு வீடமைப்பு மானியக் கொடுப்பனவுகளை வழங்க கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி, ஒல்லிக்குளம் கிராமங்களைச் சேர்ந்த 180 முஸ்லிம் குடும்பங்களுக்கும் ஏறாவூர் கிரான் பகுதியைச் சேர்ந்த 120 தமிழ்க் குடும்பங்களுக்கும் வீடமைப்பு மானிய முதற்கட்டக் கொடுப்பனவாக தலா 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டவுள்ளது.

இதற்காக சுமார் 60 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் கடந்த 10 வருடங்களாக தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இரராசி பலன்

27-10-2002
(ஐப்பசி 10, ஞாயிறு)
சஷ்டி மு.இ 7.28 வரை
திருவாதிரை பி.ப 4.12 வரை
இராகு காலம்- 4.33-6.03
நல்ல நேரம்- 9.03-12.33

**மேடம்**

சகோதரர் உதவி, இனிய சம்பவம், கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை.

**இடபம்**

போசன சுகம், காரிய தாமதம், தேவையற்ற வார்த்தை, தன விரயம்.

**மிதுனம்**

நல்ல முயற்சி, சென்ற இடத்தில் செல்வாக்கு, கற்பனை மிகுதி, குடும்ப நன்மை,

**கடகம்**

வீண் அலைச்சல், சயன சுகக் குறைவு, தொழில் கஷ்டம், சுப செலவு,

**சிங்கம்**

கீர்த்தி, தெய்வதரிசனம், உறவினர் வருகை, முயற்சி கை கூடும்.

**கன்னி**

அதிக பிரயாசை, சுப நிகழ்ச்சி, உற்சாகம், நல்ல செய்தி.

**துலாம்**

உடல் உழைப்பு, வயிற்று வலி, வீண் பயம், புதிய சிந்தை.

**விருச்சிகம்**

எதிர் பாராத பிரச்சினை, திருடர் பயம், முயற்சி தடங்கல், போசன சுகம்.

**தனுசு**

தெய்வ தரிசனம், திடீர் பயணம், பொருள் சேர்க்கை, தொழில் சிந்தை.

**மகரம்**

காரிய அனுகூலம், பகைவர் நேசம், சுக வாழ்வு, சுவாரஸ்யம்.

**கும்பம்**

குடும்பக் கவலை, காரிய தாமதம், தொழில் விருத்தி, உடல் நலக் குறைவு.

**மீனம்**

பயந்த சுபாவம், அற்பர் நேசம், தாய்வழி உறவு, வாகன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## ஆளும் - எதிர்க் கட்சிகள் கருத்தொற்றுமையுடன் செயற்பட்டு சமாதானப் பேச்சு வெற்றிபெற உதவ வேண்டும்

### அமெரிக்க பிரதி உதவி வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு அரசியல் சார்பற்ற ஒத்துழைப்புகள் வழங்கப்படுவதையே அமெரிக்கா விரும்புகிறது.

இவ்வாறு தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி உதவி வெளிவிவகார அமைச்சர் டொனால்ட் காம்ப் இலங்கைக்கு விஜயம்மேற்கொண்ட போது தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ உட்பட அமைச்சர்கள் பலரையும் மற்றும் உயர்மட்ட அரசாங்க அதிகாரிகளையும் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்சந்திப்பின்போது காம்ப் மேலும் கருத்து தெரிவிக்கையில்:

நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை சர்வதேசசமூகம் வரவேற்கிறது.

நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கருத்து ஒற்றுமை ஏற்பட்டால் அது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைமேலும் முன்நகர்த்திச் செல்லவும், வெற்றி பெறச் செய்யவும் உதவும் என்று சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில், இவ்வாறான கருத்தொற்றுமையுடன் காணப்படும் தீர்வுகளால் நாட்டு மக்கள் அனைவருக்கும் பெரிதும் நன்மை ஏற்படும்.

எனவே, நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு பூரண ஒத்துழைப்பினை கட்சி பேதமின்றி அனைவரும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் கொண்டுள்ள நிலைப்பாட்டையும் டொனால்ட் காம்ப் இச்சந்திப்பின் போது விளக்கமாக எடுத்துரைத்தார்.

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதானசூழலைதொடர்ந்து அமெரிக்காவிலிருந்து பயங்கரவாத எதிர் நடவடிக்கைகளுக்கென நிபுணர் பிரான்சிஸ் கெய்லர் அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மிடேஜ் ஆகியோரது வருகையை தொடர்ந்து அடுத்து டொனால்ட் காம்பும் வருகை தந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ- 8)

## கல்வியியல் முதுதத்துவமாணி கற்கைநெறி நேர்முகத்தேர்வுக்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படவுள்ள கல்வியியல் முதுதத்துவமாணி கற்கை நெறிக்கான நேர்முகத்தேர்வுக்குதேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன.

ரி அல்பிறட்சி அமிர்தலிங்கம், அ. ஆனந்தராஜா, கே. அருந்தவராஜா, என். பாலச்சந்திரன், ரி. பாலசுப்பிரமணியம் எவ் பாஸ்கரன், கே. பாஸ்கரன் எ. இ எஸ் கிறிஸ்தோபர், எ.எம். குறூஸ்,

எம். ஆர். பி. குறாடே, கே. பிகுராடே, சி. பிரான்சிஸ் சேவியர், ஜி. கணேசலிங்கம், தி. எஸ். ஜோர்ஜ் வீ. ஞானகாந்தன், என். ஞானவேல், எம். கௌரிகாந்தன், எம். கே. கிருஷ்ணயோகன், கே. குலசேகரம், வி குமரவேற்பிள்ளை, ஏ. மடுதீன்மிரல், ஆர். மன்மதராஜன், ரி. மரியசீலன், வி. மீனாட்சிசுந்தரம், எஸ். மோகனராஜன், எம். முரளிதரன், சே. முருகவேல்,

கே. முத்துக்கிருஷ்ணன், ஜே. நடராசா, ஆர். நடராசா, எம். நாகராசா, எஸ். நாகராசா, ஜி. நாகராசா, எஸ் நாகராசா, என். நாகேந்திரன், சி. நாகேந்திரன், டி. நாகேந்திரன்,

சி. எம். ஈ. எஸ். நாகேஸ்வரன், எஸ். நகுலேஸ்வரன் ஆர். நமசிவாயம், கே. நித்தியானந்தம், ப. சிவசித்திரா, எல். பஞ்சாட்சரம், பி பஞ்சாட்சரம்.

இக்நோசியஸ், எம். இதயசிவதாஸ், வி. ஜெகநாதன், எம். ஜெயக்குமார், வி. ஜெயரட்ணராஜா, கே. ஜெயதார், எஸ். ஜெய வீரசிங்கம், ஜெ. கலாதரன், ரி. கலைச் செல்வன், எஸ். கனகலிங்கம், வி. கனகநாயகம், கே. கனகராஜா, கே. கந்தையா, வை. காசிப்பிள்ளை, எஸ். கிருபாகரன், எஸ். கலாகரன், கே. கிருஷ்ணகுமார்.

ரி. பங்கையச் செல்வன், வி. கலையரசன், எஸ். பிறேம்குமார், கே. பத்மகாந்தன் எம். எம். பிலிப்தம்பிராசா, கே. புஸ்பராசா, ஆர். ராஜமகேந்திரன், பி. ஆர். ராஜ்குமார், எஸ். இராமநாதன், எஸ். ரமேஸ், ஜி. ரத்னசிங்கம், எம். ரவீந்திரன், எல். புறாமன் கூரைடாஸ், எஸ். தேவமனோகரன், எஸ். தேவசகாயம், கே. திலகரத்தினம் எஸ். திருநாவுக்கரசு, வி. தியாகலிங்கம், எஸ். தியாகலிங்கம், ஈ. துரைசிங்கம் எஸ். உருத்திரகுமார் வி. வி. எம் விக்டர் லக்பேட், சி. விஜியசந்திரன் அந்தோனிஸ், ஓ. விஜியரத்தினம், எஸ். விஜேந்திரசர்மா, வி. விபுதராசா, ஆர். விவேகானந்தன், எஸ். விவேகானந்தம், எம். விவேகானந்தம், ஈ. எஸ். யோகேஸ்வரன் எம். ஆனந்தராசா, எஸ். உதயகுமார், என். தெய்வேந்திரராசா, ஏ. ஆரோக்கியநாதன் எம். கிறிஸ்ரியன்,

(2ம் பக்கம் பார்க்க)

# சீன-அமெரிக்க பேச்சு வார்த்தையில் வட கொரியா தொடர்பான பிரச்சினை ஆராயப்படும்

(பெய்ஜிங்)
சீனத் தலைவர் ஜாம்செமினும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷீம் சந்தித்துபேச்சு வார்த்தை நடத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளனர்.

இப்பேச்சு வார்த்தையில் வட கொரியா தொடர்பான பிரச்சினைகளும், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் உலக நாடுகளிற்கு கிடைப்பது தொடர்பான பிரச்சினைகளும், தீர்மானங்களும் முன்னுரிமை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா அணு ஆயுதங்களைப்பெற்றுக் கொள்ள முயலும் மார்க்கத்தை கைவிட இணங்க வைக்கும் பொதுவான அணுகுமுறையொன்றை அமெரிக்கா ஏற்படுத்த முயற்சிக்கும் எனவும் இவ்விடயத்தில் தலையிடுவதற்குச் சீனாவிற்கு சிறந்த வாய்ப்பு உள்ளதெனவும் அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா படைத்தாக்குதலை நடத்துவதில்லை என்ற உடன்படிக்கைக்கு இணங்கி வந்தால் தமது அணு ஆயுதத் திட்டம் தொடர்பான அமெரிக்க பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு தாம் முன் வருவதாக வட கொரியா அறிவித்த சிறிது நேரத்திற்குள் அமெரிக்காவும் சீனாவும் இச் சந்திப்பினை மேற் கொள்ள இணங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

# பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு திட்டவட்டமாக வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)
பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு என்று இந்தியப் பிரதமர் அடல்பிகாரிவாஜ்பாய் தெரிவித்துள்ளார். தேசிய வாத கூட்டணி ஆட்சியின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி புதுடில்லியில் நடைபெற்ற அரசியல் கூட்டத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அயல் நாடான பாகிஸ்தான் இந்தியாவிற்குள் தற்கொலைப் போராளிக் குழுக்களைத் தயங்காமல் அனுப்பி அப்பாவிப் பெண்களையும், சிறுவர்களையும் கொன்றொழிக்கின்றது.

என்றும் இவ் அராயகம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு என நம் புலவர்கள் அனைவரும் நிஜ உலகில் இருந்து கற்பனை உலகில் வாழ்பவர்கள். இந்தியா பாகிஸ்தான் மீது கொண்டுள்ள பகைமையுணர்வு காரணமாகவே, உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டு வருவதாக சர்வதேச ரீதியில் கிடைத்து வரும் பாராட்டை இந்தியத் தலைவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாமையினாலேயே இந்தியா இவ்வாறு கூறியுள்ளது என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அஸீஸ் அகமத் கான் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். (சு-2)

# அல்கெய்தா அமைப்புடன் தொடர்புடைய முஸ்லிம் மதத் தலைவர் கைது

(பிரிட்டிஷ்)
பிரிட்டனில் அல்கெய்தா அமைப்புடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப் படும் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் கடந்த செப்ரம்பர் 11 ம் திகதி இடம் பெற்ற தாக்குதலிற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப் பட்ட பயங்கரவாத்திற்குப் எதிரான தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

அதிகாரிகள்கைது செய்யப்பட்டவரின் பெயரை வெளியிடாத போதும் 1994ம் ஆண்டு அகதி என்று பிரிட்டனில் குடிபுகுந்த இவர் சூடானில் பிறந்த பலஸ்தீன நபர் என்றும் புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முனனர் பல நாடுகளில் மறைந்திருந்தார் என்றும் அதேவேளை இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று ஐ.நாமன்றம் வெளியிட்ட பட்டியலில் இவரது பெயர் அபூபக்கா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சு-2)

# பிரேஸிலில் இன்று ஜனாதிபதித் தேர்தல்

(பிரேஸிலியா)
பிரேஸிலில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் லூலா டி சில்லா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய கணிப்பிற்கு இணங்க லூலா டி சில்வா 60 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெறுவார் என கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் 4 வது மிகப் பெரிய ஜனநாயக நாடாக பிரேஸில் விளங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

# கைதான டாக்டரை விடுவிக்கக்கோரி இஸ்லாமாபாத்தில் போராட்டம்

(வாஷிங்டன்)
அல்கெய்தா பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் டாக்டர் அமீர் அஸீசை அமெரிக்க உளவு நிறுவனமான எவ்.பி.ஐ பிடித்து வைத்துள்ளமையை எதிர்த்து, இஸ்லாமாபாத்தில் 50 டாக்டர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

முறிவு சத்திர சிகிச்சை நிபுணரான அஸீசை எவ்.பி.ஐ ஏஜென்டுகள் லாகூர் மருத்துவமனையில் இருந்து கைது செய்துள்ளனர்.

இவர் பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனிற்குச் சிகிச்சை செய்து வந்துள்ளார் எனவும் உயிர் வேதியல் ஆயுதங்களை தயாரிக்கப் பயங்கரவாத அமைட் பிற்கு உதவி வந்துள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (சு-02)

# பலஸ்தீன- இஸ்ரேல் பேச்சு தடைப்படும் நிலையில்

(ஜெருசலெம்)
பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கிற்கான அமெரிக்கத் தூதுவர் வில்லியம்ஸ் பேர்ண்ஸ் சமர்ப்பித்த திட்டத்தை இரு நாட்டுத் தலைவர்களும் நிராகரித்துள்ளமையினாலே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

பேர்ண்ஸ் தமது தீர்வுத் திட்டம் தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனிடம் ஜெருசலத்தில் பேச்சு நடத்தியதுடன் மேற்குக்கரை நகரான, ஜெனிக் கோவில் பலஸ்தீன அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் இது வரையும் தெரியவரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (சு-4)

# நேபாள அரசுடன் பேச்சு நடத்த மாவோ கெரில்லாக்கள் தயார்

(காட்மண்டு)
நோபாளத்தில் கடந்த 6 வருடமாக முடியாட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்திவரும், மாவோ கெரில்லாக்கள் அரசுடன் சமாதானப் பேச்சு நடத்தத் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தமது இயக்கத்திற்கு எதிரான முற்றுகை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என மாவோ கொரில்லாத் தலைவர் உள்ளூர் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் குறிபிபட்டுள்ளார்.அவ்வறிக்கையில், தமது இயக்கத்திற்கு எதிரான பாதுகாபபுப் படையினரின் முற்றுகை நிறுத்தப்பட்டால் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தத் தயாராகவுள்ளோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-2)

# கென்ய ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைப்பு

(நைரோபி)
கென்ய ஜனாதிபதி டானியல் அராப்மொய் பாரளுமன்றத்தை நேற்றுக் கலைத்துள்ளார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களிற்குள் புதிய பாராளுமன்ற அமர்வு இடம் பெறவேண்டும் என்று அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளபோதுமதேர்தலுக்கான திகதிகள் குறிப்பிடப்படாத நிலையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் பொதுத்தேர்தல் இடம் பெறலாம் என தேர்தல அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பொதுத் தேர்தலுடன் ஜனாதிபதி தேர்தல் இடம் பெறுமா என்பது தெரிய வில்லை எனவும் அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற்றால் டானியல் அராப்மொய் போட்டியிட மாட்டார் எனவும் ஜனாதிபதியின் செய்திப் பிரிவு விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1978ம் ஆண்டு முதல் கென்ய ஜனாதிபதியாக டானியல் அராப் மொய் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (சு-2)

# சீனாவும் தாய்வானும் தமக்கிடையோயான பிரச்சினையை சமாதானமாக தீர்க்கவேண்டும்

## அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு

(தைபீ)
சீனாவும், தாய்வானும் தமக்கிடையிலான பிரச்சினைகளைச் சமாதானமாகத் தீர்த்துக கொள்வதற்கு அமெரிக்கா உதவி செய்யும் அதேவேளை, தாய்வானின் சுதந்திரத்தை அமெரிக்கா ஆதரிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது. சீன ஜனாதிபதி ஜியாங செமினுடன், அமெரிக்காவின் ரெக்ஸஸ் மாநிலத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட போதே அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் டபிள்யூ புஷ் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரே சீனா எனும் கொள்கையை அமெரிக்கா ஆதரிக்கின்றது. இதனால் தாய்வான் நீரிணைக்கு இருபுறமும் உள்ள சீனர்கள் ஒரே சனா என்னும் கொள்கையே பின்பற்ற வேண்டும்.

இதனால் தாய்வானும் சீனாவின் ஒரு பகுதியாகவே கருதப் பட வேண்டும். அத்துடன் இது தொடர்பான பிரச்சினைகளும் சமாதானமாகவே தீர்த்துக் கொள்ளப் பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (சு)

# செச்சினிய தீவிரவாதிகளின் கடத்தல் நாடகம் ரஷ்யத் துருப்புக்களால் முறியடிப்பு

(மொஸ்கோ)
மொஸ்கோவில் சுமார் 700 பேரை பணயக் கைதிகளாக வைத்திருந்த செச்சினியத் தீவிரவாதிக்ளின் கடத்தல் நாடகம் ரஷ்யத் துருப்புக்கள் மேற்கொணட அதிரடி நடவடிக்கைகளை அடுத்து முடிவுக்கு வந்துள்ளது.

செச்சினியத் தீவிரவாதிகளின் கட்த்தல நாடகம் பல மிரட்டல்களிற்கு மத்தியில் தொடர்ந்து கொண்டிருந்த போது ரஷ்யப் படைகளின் திடீர் அதிரடி நடவடிக்கைக்குப் பின்னர் முடிவுக்கு வந்துள்ளதெனவும் இந்த நடவடிக்கை மூலம் வீண் உயிரிழப்புக்களும் சேதங்களும் தவிர்க்கப் பட்டுள்ளதோடு செச்சினியத் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டுள்ளதாக ரஷ்ய உட்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (சு-4)

விரிவான செய்தி 10ம் பக்கம்



ரஷ்ய அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்துகின்றனர்

பணயக் கைதிகள் மீட்கப்படுகின்றனர்.



## சண்டைகள் .....

**''பாருக்குள்ளே தெய்வம் ஒன்று-இதில் பற்பல சண்டை கள் வேண்டாம்''**

என்று பாடுகிறார். வெவ்வேறு பாதைகள் ஆனால் கடவுள் ஒன்று இதற்காக மனிதப்பண்புகளை மறந்து மதம் கூறிய மார்க்கங்களை மறந்து மதச் சண்டைகள் போடுவதால் பயனில்லை. சர்வமதக் கருத்துக்களையும் ஏற்று மனிதர்களாக வாழமுனைவோம் என அழைக்கிறார்.

நோய்ச்சாவு, போர்ச்சாவு ஆகிய சாவுகள் நீங்கி மக்கள் வாழ வேண்டுமென்று பாடுகிறானே யன்றி இயற்கை எய்துதலிலிருந்து நீங்க வேண்டுமென்று பாடவில்லை. சமாதான வாழ்விற்கு எம்மைத் தயாராகும் படிபணிக்கின்றார்.

வருங்காலச் சந்ததியான குழநதைகளிடம் சில விடயங்களைச் சொல்வோம். அவர்கள் கேட்பார்கள் என்ற நம்பிக்கையால் சமாதானக் கருத்துகளை விதைகக்த் தொடங்கினார்.

**''ஓடி விளையாடு பாப்பா-நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா-ஒரு**
**குழந்தையைவையாதே பாப்பா''**

முளையிலே சொல்லி விடுகிறார் மகிழ்ச்சியோடும் உடல் உழைப்போடும் ஒற்றுமையோடும் வாழப்பழகிக் கொள் என்று. இவை எல்லாம் சமாதான வாழ்விற்கான அத்திவாரமாகும்.

நீதியும் மதிநுட்பமும், அன்பும் நிறைந்து விட்டால் மனிதன் ஒரு முழுமனிதனாகி விடுவான். இவர்களையே பாரதி மேலோர் எனக் காட்டுகிறார்.

உலகம் தொடங்கிய காலத்திலிருந்து மனித வாழ்வைப் பார்க்கும் போது வேறு பாடுகள் இருக்கத்தான் செய்கிறது. பலர் கூடி வாழும் சமுதாயத்தை அமைப்பதே மனிதனின் தலையாய கடமை. தனிமனித ஒழுக்கம் நிச்சயமாக இச் சமுதாயத்திற்குத் தேவையானது. ஒவ்வொரு மனிதனுக்கும் கூட்டுப் பொறுப்புகள் மிக அவசியமானது எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்வோமாயின் ஒவ்வொருவருக்கும் சமாதானம் கிடைத்தே ஆகும். பாரதியின் பாதையில் சென்று சமாதானமான வாழ்விற்கான சிந்தனைகளை ஏற்று நாமும் அதற்காக முயற்சிப்பது சாலச்சிறந்தது. மதம் போதிக்காத விடயங்கள் பல இந்த அதிசய மனிதனால் போதிக்கப்பட்டுள்ளன.

# இன்று ஒரு தகவல்

## வியப்பு ஒரு மெய்ப்பாடு

ஒரு நண்பர் அவசர அவசரமாக என்னிடம் ஓடி வந்து, 'என்னாலே நம்ப முடியவில்லை சார்! என் பையனா இப்படி?' என்று சொல்லி ஆச்சரியப்பட்டார். 'உங்கள் பையன் அப்படி என்னதான் செய்து விட்டான்' என்று கேட்டேன். 'என்னால் முடியாத ஒரு காரியத்தை அவன் சுலபமாகச் செய்துவிட்டான் சார்!' என்றார். 'அது என்ன தான் சொல்லுங்கள்' என்றேன். 'ஐந்தாம் வகுப்பில் அவன் ஒரே தடவையில் தேறிவிட்டான் சார்' என்றார் மூச்சு வாங்க! கஷ்டப்பட்டுப் பரீட்சை எழுதியவன் அவன்- இவருக்கு மூச்சு வாங்குகிறது.

நம்மால் செய்யமுடியாத ஒரு காரியத்தை இன்னொருவர் செய்யும்போது அது நமக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது. சர்க்கஸ் பார்க்கிறோம். அங்கே ஒருவர் அந்தரத்தில் தொங்குகின்றார். அதைப் பார்க்கும் போது அது நமக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறது. ஏனென்றால் அதுமாதிரி அந்தரத்தில் தொங்குவது என்பது நம்மால் முடியாத காரியம். நம்மால் முடியாத ஒன்றைப் பிறர் எளிதாகச் செய்கிறபோது நாம் மருள்வது இயற்கை. இதைத்தான் தொல்காப்பியம் 'மருட்கை' என்று சொல்லுகிறது.

இந்த வியப்பு இருக்கிறதே! இது நான்கு வகையில் ஏற்படுகிறதாம். அதையும் தொல்காப்பியம்தான் குறிப்பிடுகிறது. அது என்ன நாலு வகை? முதல்வகை எப்படியென்றால்- புதுமையான அரிய செயல்களைச் செய்வது, இரண்டாவது வகை- பெரும் செயல்களைச் செய்வது, மூன்றாவது வகை- மிக நுட்பமான செயல்களைச் செய்வது, நான்காவது வகை- ஆக்கம் தரும் செயல்களைச் செய்வது. 'புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கமொடு மதினம் சாலா மருட்கை நான்கே' என்கிறது தொல்காப்பியம்.

இன்றைக்கு விஞ்ஞானம் புதிது புதிதாக எதையெதையோ கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கண்டுபிடிப்புகளைப் பார்க்கிறபொழுது, ஆரம்பத்தில் ஆச்சரியமாயிருக்கிறது. அப்புறம் அது நமக்குப் பழகிப் போய்விடுகிறது. வானொ[illegible] கருத்தாழம் உண்டு என்று விளக்குகிறார்கள் ஆன்றோர் பெருமக்கள். எதைப்பற்றியும் போதுமான அளவு புரிந்து கொள்ளாதபோது ஒருவர் ஆச்சரியப்படுகிறார். புரிந்து கொண்ட பிறகு ஆச்சரியம் மறைந்து போகிறது. மிக நுட்பமான செயல்களும் நம்மை ஆச்சரியப்படவைக்கின்றன.

ஓர் அரிசியிலே ஒரு திருக்குறளை எழுதிக்காட்டுகிறார்கள். ஒரு முட்டை ஓட்டுக்குள்ளே ஓவியம்தீட்டிக்காட்டுகிறார்கள். கருங்கல் சிற்பங்களிலே எவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள்? அவற்றையெல்லாம் பார்த்து ஆச்சரியப்படுகிறோம். இதுபோலவே ஆக்கபூர்வமான செயல்களும் நம்மை வியப்பில் ஆழ்த்தும். குப்பை கூழங்களைக் கூட வாழ்க்கைக்குப் பயன்படுகிற பொருளாக மாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய செயல் நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

இடைக்காட்டுச் சித்தர் என்று ஒருவர் இருந்தார். அவர்பாடிய மூவடி முப்பது என்கிற நூலில் ஒரு பாடல் வருகிறது. 'ஆற்றல் பிறர் அறிதலின், ஆகம் கிளர்வு உறுதலின், கற்று அறிபாணர், செழுமிய கோடலின் தோற்றம் உறுகவே போற்றல் சால்வியப்வே' ஒருவருடைய ஆற்றல் தெரியாமல் இருந்தது. அவருடைய அரிய செயல்களைப் பார்க்கும் போது, வியப்பாக இருந்தது. மனதிற்குள்ளே கிளர்ச்சி, பாவலர்கள் இவர்கள் புகழைப்பாடி மற்றவர்களும் தெரிந்து கொள்ளுமாறு செய்கிறார்கள். ஆக எல்லா வகையிலும் மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வழிகாட்டுகிற ஒரு மெய்ப்பாடுதான் 'வியப்பு' என்பது.

இன்றைய இளைஞர்கள் இதைப்புரிந்து கொள்ளவேண்டும். ஆச்சரியப்படுங்கள்! ஆச்சரியப்படவைப்பீர்கள். இந்தக் காலத்தில் நம்மை எப்படியெப்படியெல்லாமோ ஆச்சரியப்படவைக்கிற அதிசய மனிதர்கள் இருக்கிறார்கள். ஒரு ஆளைப் பிடித்துச் ஜெயிலுக்குக் கொண்டு வந்தார்கள். சிறை அதிகாரி அவனை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார். இவன், ஏன் சார் அப்படிப்பார்கிறீர்கள்? நான் இப்போது இங்கே வருவது [illegible]

# கொழும்பிலிருந்து பாலா வன்னி சென்றசெலவை செலுத்துவது யார்?

## அவையில் எதிர்க்கட்சி எம். பி. வினா

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து அரச பாதுகாப்புடன் வன்னி சென்றடைந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தை ஹெலியில் அழைத்துச் செல்ல ஏற்பட்ட செலவை செலுத்துவது யார்?

கடந்தவெள்ளிக்கிழமைநிதி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் ஒதுக்கீட்டு (திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்) தில் பேசிய எதிர்க்கட்சி எம். பி ரோஹித்த அபேகுணவர்த்தன, ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை ஹெலியில் அழைத்துச் சென்றதால் ஏற்பட்ட செலவு குறித்து சர்ச்சை எழுப்பிய இந்த அரசாங்கம் எமது பொருளாதாரத்தை துவம்சம் செய்த விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தருக்கு ராஜமரியாதை வழங்குவதன் மர்மம் என்ன என்றும் அவர் கேள்விக் கணை தொடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில்; விடுதலைப புலிகளிடம் சரணடையக் கூடாது என்ற தன்மானத்துடன் நாம் யுத்தம் புரிந்தோம்ஆனால், இன்றைய அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் தன்மானத்தை விற்றுவிட்டது. இப்படியான சமாதானம் எமக்குத் தேவைதானா? என்றும் வினா வெழுப்பினார். (உ)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் தூரநோக்கில் செயற்பட வேண்டும்

## சினேர்ஜி நிறுவன இணைப்பாளர்

(தென்மராட்சி)

அரச சார்பற்ற நிறுவனங்களையும், அவற்றின் கட்டமைப்புகளையும், ஆற்றல்களையும் பலப்படுத்தி அவை தூரநோக்கில் சிந்தித்துச் செயல்பட வேண்டியதருணம் இதுவாகும்.

இவ்வாறு லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள சினேர்ஜி நிறுவனத்தின் இணைப்பாளரான திருமதி சுசீலா ராஜாநேற்று முன்தினம் அரசசார்பற்றநிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற கூட்டத்தில்தெரிவித்தார்.

இணையத்தலைவர்அ நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்துகுறிப்பிடுகையில்:

அரசசார்பற்ற நிறுவனங்கள் கடந்த காலங்களில் குடாநாட்டில் காத்திரமான பல பணிகளை ஆற்றி மக்களின் வாழ்வு மேம்பட உதவியுள்ளன. இந்த நோக்கில் இந் நிறுவனங்களின் வளர்ச்சியில் பல மாற்றங்களையும் புதிய அணுகு முறைகளையும் அறிமுகப்படுத்தவேண்டியதேவை உணரப்படுகின்றது.

யுத்தத்தினால் வட கிழக்கில் சமுதாயக் கட்டமைப்புகளில்உடைவுகளும்பின்னடைவுகளும் தோற்றம் பெற்றுள்ளன, இவற்றின் மூலாதாரக் காரணங்களை அறிந்து அவற்றினை நீக்கி புதிய கோணத்தில் நம்பிக்கையுடன் செயல்பட அரச சார்பற்றநிறுவனங்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

சர்வதேச மட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் வளர்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நோக்கமும்தொலைநோக்குப் பார்வையும் கொண்ட நிறுவனங்களால் மக்களுக்கு நல்ல பயன்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் உருவாகும்.

சமுதாயத்தில் சிறுவர் பிரச்சினை, பெண்கள் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் இனங் காணப்பட்டுள்ளன அந்த வகையில் புதிய செயற்பாடுகளை புதிய நோக்கிலும் புதிய அணுகுமுறையிலும் ஆற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(இ-77)

## தாதிமார் பற்றாக்குறை நீங்கும்!

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளின் தாதிமார் பற்றாக் குறையை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், இம்மாகாணங்களில் 400 தாதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

(உ-8)

## தொலைக் கல்வி தொடக்கம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசஅரச உத்தியோகத்தர்களுக்கான தொலைக் கல்வி அறிமுக வகுப்பு நாளை திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி பிரதேசசபை செயலாளர் செ.சீனிவாசன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச [illegible]

## சுயாதீன ஆணைக் குழு அமைப்பதில் தடங்கல்

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்களில் அங்கம் வகிப்பவர்களுக்கு சட்டப்பாதுகாப்பினை அளிக்கும் 18 வது அரசியலமைப்பு மாற்றத்தினை [illegible] தாம் நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்கும் என்பதனாலும்,

இதன்படி நீதிமன்றத்தின் அதிகாரத்தை மீறியவையாக சுயாதீன ஆணைசகுழுக்களின் நடவடிக்கைகள் அமை[illegible]

செய்வது. 'புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கமொடு மதினம் சாலா மருட்கை நான்கே' என்கிறது தொல்காப்பியம்.

இன்றைக்கு விஞ்ஞானம் புதிது புதிதாக எதையெதையோ கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கண்டுபிடிப்புகளைப் பார்க்கிற பொழுது, ஆரம்பத்தில் ஆச்சரியமாயிருக்கிறது. அப்புறம் அது நமக்குப் பழகிப் போய்விடுகிறது. வானொலிப்பெட்டி புதிதாக வந்த பொழுது, அதைச் சுற்றி எவ்வளவு கும்பல்! ஒரு பெட்டி பேசுகிறது என்பது எவ்வளவு வியப்புக்குரிய விஷயம்? இப்போது யாரும் வானொலிப் பெட்டியை வியப்போடு பார்ப்பதில்லை. மாறாக அதை அலட்சியமாகவும் பார்க்கஆரம்பித்துவிட்டோம் மதினம் சாலா மருட்கை என்று ஒரு சொற்றொடர் வருகிறது பாருங்கள் அதிலே

இதைப்புரிந்து கொள்ளவேண்டும். ஆச்சரியப்படுங்கள்! ஆச்சரியப்படவைப்பீர்கள். இந்தக் காலத்தில் நம்மை எப்படியெப்படியெல்லாமோ ஆச்சரியப்படவைக்கிற அதிசய மனிதர்கள் இருக்கிறார்கள். ஒரு ஆளைப் பிடித்துச் ஜெயிலுக்குக் கொண்டு வந்தார்கள். சிறை அதிகாரி அவனை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார். இவன், ஏன் சார் அப்படிப்பார்கிறீர்கள்? நான் இப்போது இங்கே வருவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? என்று கேட்டான்.

சிறை அதிகாரி நீஇப்போது இங்கு வந்ததில் எனக்கு ஒன்றும் ஆச்சரியம் இல்லையப்பா ஏற்கனவே நீ இங்கிருந்து விடுதலையாகிப்போய்ஆறுமாதங்கள் ஆகிவிட்டன இவ்வளவு பிந்தி வருகிறாயே...அதுதான் எனக்கு ஆச்சரியம் என்று சொன்னார். □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜயலத் வீரக்கொடியை மன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் விமானப்படைத் தளபதி ஜெயலத்வீரக்கொடியை எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி ஆஜராகுமாறு மேல்நீதிமன்ற நீதிபதி எரிக்தஸ்ஸநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

ஜெயலத் வீரக்கொடிக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு வழக்குகள் தொடர்பாகவே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன்மாதம் 15 ஆம் திகதி பொறளையில் இவர் சென்ற வாகனம் மோதி ஒருவர் மரணமானது குறித்தும் விசாரணைகளில் பிழையான தகவல்களை வழங்கியது தொடர்பாகவும்.

முன்னாள் விமானப்படைத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் வாகன இறக்குமதியில் மோசடி செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டுகளுக்காகவுமே நீதிவான் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார். (உ-8)

# தொடக்கம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசஅரச உத்தியோகத்தர்களுக்கான தொலைக் கல்வி அறிமுக வகுப்பு நாளை திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி பிரதேசசபை செயலாளர் செ.சீனிவாசன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர்செ.பத்மநாதன்கலந்து கொள்ளவுள்ளார். (உ-6)

# பிரசவ விடுமுறை

(மானிப்பாய்)

மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், வலய மற்றும் சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றும் பெண் சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு பிரசவ விடுமுறை பற்றி இலங்கை சமுர்த்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம், வாரத்திற்கு நாட்கள் 5 எனக் கவனத்தில் எடுத்து சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாட்களை உள்ளடக்கி முதலாவது மற்றும் இரண்டாவது உயிருடனான பிள்ளைப் பேற்றுக்கு 84 நாட்களும், அதன் பின் ஏற்படும் உயிருடனான பிள்ளைப் பேற்றுக்கு 42 நாட்களும் பிரசவ விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் சகல மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களுக்கு சமுர்த்தி அதிகார சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உ-12

...முகப்படுத்தவேண்டியதேவை உணரப்படுகின்றது.

யுத்தத்தினால் வட கிழக்கில் சமுதாயக் கட்டமைப்பு கிலும் புதிய அணுகுமுறையிலும் ஆற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டார். (இ-77)

# சுயாதீன ஆணைக் குழு அமைப்பதில் தடங்கல்

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்களில் அங்கம் வகிப்பவர்களுக்கு சட்டப்பாதுகாப்பினை அளிக்கும் 18 வது அரசியலமைப்பு மாற்றத்தினை உயர் நீதிமன்றம் நிராகரித்ததை தொடர்ந்து சுயாதீன ஆணைக்குழுக்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

சுயாதீன ஆணைக்குழுக்களில் அங்கம் வகிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்களது முடிவுகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்படுமிடத்து தாம் நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்கும் என்பதனாலும்,

இதன்படி நீதிமன்றத்தின் அதிகாரத்தை மீறியவையாக சுயாதீன ஆணைசுகுழுக்களின் நடவடிக்கைகள் அமைந்திருக்கும் பட்சத்திலும் அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 18 வது அரசியலமைப்பு மாற்றம் கொண்டுவரப்பட்டது.

எனினும், உயர்நீதிமன்ற தீர்ப்பையடுத்து சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன. (உ-3)

# துணிகரக் கொள்ளையர் வகையாக மாட்டினர்

(புத்தளம்)

கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு சென்று கொண்டிருந்த தனியார் பஸ் வண்டி ஒன்றில் சிலாபத்திற்கண்மையில் இனந் தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்களினால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை இக் கொள்ளைச் சம்பவம் குடியிருப்புகள் இல்லாத பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் இருந்த பிரயாணிகளிடம் ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளை அடித்துக்கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை அதே பஸ் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றபோது இக் கொள்ளையர் அதில் ஏறிப் பயணம் செய்தபோது பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இதனையடுத்து அவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

# முஸ்லிம் எம். பிக்களின் பகிஷ்கரிப்பு பற்றி உயர்மட்டம் நள்ளிரவில் கூடி ஆராய்வு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு தனியலகு ஏற்படுத்துவது சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒன்பது எம். பிக்கள் தொடர்ந்தும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருவதையடுத்து முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கடந்த வியாழக்கிழமை இரவு கூடி இது குறித்து நீண்டநேரம் ஆராய்ந்துள்ளது.

நள்ளிரவு 12.00 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை சுமார் நாலரை மணித்தியாலங்கள் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு விவகாரம் ஆராயப்பட்டது.

இதன்போது, வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற போதும் எந்தவிதமான முடிவுகளோ தீர்மானங்களோ எடுக்காது கூட்டம் முடிவுற்றதாக முஸ்லிம்காங்கிரஸின் அதிருப்தி எம். பிக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கூட்டுறவுத் துறைஅமைச்சர் ஏ. எம்.எம். காதர் பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கும் ஒன்பது முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது அரசுக்கான ஆதரவைத்தாம் விலக்கிக்கொள்ள மாட்டோம் என்றும் அரசை ஆதரிப்போம் என்றும் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ம)

## பனைவிதை நடுகை

(ஊர்காவற்றுறை)

தீவக வளம் பேணும் அமைப்பினால் ஊர்காவற்றுறை, வேலணைப்பகுதிகளில் பரவலாக பனம் விதை நடுகை செய்யப்படவுள்ளது.

மேற்படி அமைப்பினால் வேலணை துறையூர், சரவணை, சுருவில், புளியங்கூடல் பகுதிகளில் பனம்விதை நடுகை செய்யப்படவுள்ளது.

(உ-75)

## மட்டக்களப்பு இளைஞன் கழுத்து வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பூம்புகார் மாடுவத்தை மடுவத்திற்கு அருகில் கடந்த வியாழக்கிழமை இரவு இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் முருகேசு காந்தலிங்கம் (வயது-28) என்பவருடையது என இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 7 00 மணியளவில் புகையிரத நிலைய வீதியில் உள்ள கடை ஒன்றில் உணவு அருந்திவிட்டு மெதடிஸ் மத்திய கல்லூரிக்கு இரவுநேர காவல் கடமையின் பொருட்டு சென்றுகொண்டிருந்தவேளை இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேற்படி நபரின் சடலம் சம்பவ தினத்தன்று இரவு 8.30 மணியளவில் புதிய பாலத்தடி கண்ணகி அம்மன் கோவிலடியில் கழுத்தில் வெட்டுக்காயங்களுடனும் கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டதை அடுத்து பொலிஸாரிற்கு பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் மீட்கப்பட்டது.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட நபர் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர் ஒருவரின் தங்கையின்கொலையோடு சம்பந்தப்பட்டவர் என சந்தேகிக்கப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

(உ-10)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஐப்பசி மாதத்திற்குரிய மலர் வெளிவந்துள்ளது. (உ-8)

## வர்த்தகர் தாக்கி வாடிக்கையாளர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சந்தைப் பகுதியில்உள்ள கடை ஒன்றின் உரிமையாளரால் தாக்கப்பட்டு, வாடிக்கையாளர்ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின்போதுஏ. குணசிங்கம் (வயது 56) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-6)

## தென்னந்தோட்ட உரிமையாளர்கள் மீது அமைச்சர் ரவி பாய்ச்சல்

(கொழும்பு)

உள் நாட்டுச் சந்தையில் தேங்காயின் சில்லறை விலைகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு தொடர்பாக நுகர்வோர் விவகாரஅமைச்சர்ரவிகருணாரட்ணதென்னந் தோட்டக்காரர்களை எச்சரித்துள்ளார்.

பாவனையாளர்களுக்கு நியாயமான விலையில் தேங்காய்களை விற்க முடியாது போகுமாயின் தேங்காய்களை இறக்குமதி செய்து விற்பனைக்கு விடப்போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இது பற்றி மேலும் கூறுகையில்; ஆண்டொன்றுக்குநாட்டிற்கு 3 ஆயிரத்து 100மில்லியன் தேங்காய்கள் தேவைப்படுகிறன.

ஆனால் உற்பத்தி செய்யப்படுவது 2ஆயிரம் மில்லியன் தேங்காய்களாகும்.

தென்னை உற்பத்தியாளர்கள் வளங்களை அதிகரிக்காவிட்டால் தேங்காய்களை இறக்குமதி செய்யப்போவது தவிர்க்க முடியாதது என்று தெரிவித்தார். (உ)

## காவலூரில் பனை விதை நடுகைத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கான பனை விதை நடுகைத் திட்டம் அண்மையில் கரம்பொன் கிழக்கில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் தீவக வளம் பேணும் அமைப்பு, பனை அபிவிருத்திச் சபை, ஊர்காவற்றுறை பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து மேற்படி பனை விதை நடுகைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளன.

(உ-75)

## நயினை மக்களின் குறை நிறைகள் குறித்து கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு மக்களின்வேண்டுகோளுக்கு இணங்க தீவகமக்கள் நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் நயினாதீவில் உள்ள மக்களின் குறைநிறைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழனன்று நயினாதீவு மகாவித்தியாலய முன் பள்ளி மண்டபத்தில் இடம் பெற்றது.

நயினாதீவு பொது அமைப்புகளின்பிரதிநிதி எஸ். சாந்தலிங்கம் தலைமையில் இடம் பெற்ற மேற்படி கலந்துரையாடலில் நயினாதீவு மக்களின்குறைகள், தேவைகள் குறித்துவிரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேற்படிகலந்துரையாடலில் தீவகமக்கள் நலன் காப்பக காப்பாளர் ப. கனகலிங்கம், நயினாதீவு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் நயினாதீவுப் பிரதான வீதி கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படாமை குறித்தும் அதனை திறப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு இவ்விடயம் தொடர்பாக இலங்கை கடற்படையின் நயினாதீவு முகாம் பொறுப்பதிகாரிக்கு மகஜர் அனுப்புவது என தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் நயினாதீவு வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாமை முழுமையான மின்சார வசதியில்லாமை, பிரதானவீதி உட்பட பல்வேறு வீதிகள் திருத்தப்படாமை, கடந்த 10 வருடங்களாக விவசாயநடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்படாமை ஆகியன குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு மகஜர் அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-75)

## சர்வதேச மொழிப் பாலர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மொழிப் பாலர் பாடசாலை ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

இலங்கை 7 ஆம் நாள் திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இப்பாடசாலை இயங்கவுள்ளது.

இலங்கையில் நீர்கொழும்பு வவுனியா, திருகோணமலை ஆகியஇடங்களில்இவ்வாறான பாடசாலை உள்ளதாயினும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ள முதல் பாடசாலை இதுவாகும். (உ)

## ‘சுதந்திர வேட்கை’ வெளியீடு

(வவுனியா)

திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய சுதந்திர வேட்கை நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, அரங்கச்செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த விந்தன், பூந்தோட்ட அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் திருமதி பத்மா ஜெயச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அறிமுகவுரையை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும், வெளியீட்டு உரையை பேராசிரியர் எஸ். மோகனதாஸும் நிகழ்த்தினர்.

## மட்டு கல்வியியல் கல்லூரியில் கணித, விஞ்ஞான கற்கை மீண்டும் ஆரம்பம்

## சர்வதேச மொழிப் பாலர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மொழிப் பாலர் பாடசாலை ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

இலங்கை 7 ஆம் நாள் திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இப்பாடசாலை இயங்கவுள்ளது.

இலங்கையில் நீர்கொழும்பு வவுனியா, திருகோணமலை ஆகியஇடங்களில்இவ்வாறான பாடசாலை உள்ளதாயினும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ள முதல் பாடசாலை இதுவாகும். (உ)

மட்டு கல்வியியல் கல்லூரியில்

## கணித, விஞ்ஞான கற்கை மீண்டும் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தேசியக் கல்வியியல் கல்லூரியில் மீண்டும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியகூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவருமான யோசப் பரராசசிங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு தேசியகல்வியியற் கல்லூரியில் ஏற்கனவே நடைபெற்று வந்த கணித, விஞ்ஞான பாடநெறிகள் இடை நிறுத்தப்பட்டு அட்டாளைச் சேனை தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## கொலைச் சந்தேக நபர் நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

கண்டி உடதலவின்ன 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பந்தமான வழக்கின் 40வது சந்தேக நபர் நேற்று முன் தினம் தெல்தெனிய மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

விஜயசிங்க ஆராட்சியாகே மகிந்த என்ற சந்தேக நபரே நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

இந்த சந்தேக நபரை கைது செய்யும்படி தெல்தெனிய நீதிவான் இனோக்கா றணசிங் ஏற்கனவே பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார்.

சரணடைந்தசந்தேகநபரை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர்சார்பாகஆஜரான சட்டத்தரணிவிடுத்தவேண்டுகோளை நிராகரித்த நீதிவான் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தர விட்டுள்ளார்.

இவ்வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 39பேர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

---

நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, அரங்கச்செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த விந்தன், பூந்தோட்ட அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் திருமதி பத்மா ஜெயச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அறிமுகவுரையை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும், வெளியீட்டு உரையை பேராசிரியர் எஸ். மோகனதாஸும் நிகழ்த்தினர். (உ-10)

---

டல் ஒன்று கடந்த வியாழனன்று நயினாதீவு மத்தி முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.

நயினாதீவு பொது அமைப்புகளின் பிரதிநிதி எஸ். சாந்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் நயினாதீவு மக்களின் குறைகள், தேவைகள் குறித்துவிரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் தீவகமக்கள் நலன் காப்பக காப்பாளர் ப. கனகலிங்கம், நயினாதீவு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தொடர்பாக இலங்கை கடற்படையின் நயினாதீவு முகாம் பொறுப்பதிகாரிக்கு மகஜர் அனுப்புவது என தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் நயினாதீவு வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாமை முழுமையான மின்சார வசதியில்லாமை, பிரதானவீதி உட்பட பல்வேறு வீதிகள் திருத்தப்படாமை, கடந்த 10 வருடங்களாக விவசாயநடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்படாமை ஆகியன குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு மகஜர் அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-75)

---

## மீள் குடியமர்வுக் கொடுப்பனவு நிதி வழங்குவதில் பாரபட்சம்

### 'உ' அட்டைக்காரர் போர்க் கொடி

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவில் இதுவரை மீளக் குடியமர்ந்துள்ள 15ஆயிரத்து 857 குடும்பங்களுள் 'உ' அட்டை வைத்திருக்கும் 6ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மீள் குடியமர்வு நிதி வழங்குவதில் புறக்கணிப்பு காட்டப்பட்டு வருவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் பெரும் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

இதேவேளை 'அ' அட்டைக்குரியவர்களுக்கு மீள் குடியமர்வு நிதி வழங்கப்படுவதற்கான அடிப்படைப் பதிவு வேலைகள் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், மீள் குடியமர்வுக் கொடுப்பனவை 'அ' அட்டைக்குரியவர்களுக்கு வங்கிகள் மூலம் வழங்குவதற்கு உதவியாக ஒவ்வொரு குடும்பத்தையும் வங்கிக்கணக்கு ஆரம்பித்து, கணக்கு இலக்கங்களை கிராமசேவையாளர்களிடம் வழங்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 'அ' அட்டைக்குரியவர்கள் தமது வங்கிக்கணக்குகளை சாவகச்சேரி இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகளில் ஆரம்பித்து வருகின்றனர்.

இதனால் இம்மூன்று வங்கிகளிலும் கடந்த ஒரு சிலதினங்களாக மக்கள் கூட்டம் காணப்படுகிறது.

இது இவ்வாறிருக்க கைதடியிலுள்ள 6கிராமசேவையாளர் பிரிவுகளிலும் முன்னர் மீளக் குடியமர்ந்த சுமார் 2ஆயிரம் குடும்பங்களுக்கு, 'அ'- 'உ' அட்டைகள் வித்தியாசமின்றி இரண்டு கட்டமாக மொத்தம் 12ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது எனவும் அறியப்படுகின்றது.

எனவே தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் அரசின் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என 'உ' அட்டைக்குரியவர்கள் கோரி வருகின்றனர். (இ-77)

# சண்டைகள் இல்லாத சமாதானம் நிறைந்த ஒரு உலகில் கூடிவாழும் சமுதாயமே குறிக்கோள் என்றார் பாரதியார்

எம்.எஸ்.எஸ். இரத்தினசேகரன்

மனித சமூகத்தின் வளர்ச்சிப் போக்கினைப்பார்க்கும் போது நிம்மதியை நோக்கமாக கொண்டே ஒவ்வொரு பருவத்தின் நகர்வுகள் ஏற்படுகிறது. குழந்தை பிறந்து ஒரு சில நிமிடங்களில் குழந்தையின் அழுகுரல் கேட்கிறது. அத்தோடு நிம்மதியும் பிறக்கிறது. தாயையும் சேயையும் பார்க்கும் போது உறவுகளின் முகங்கள் மலர்கிறது. நிம்மதி ஊற்றெடுத்துப் பாய்கிறது. பாதிமயக்கமாகயிருக்கும் போது தாயோ படுக்கையில் கிடந்து கொண்டே தனது இரு கரங்களையும் அசைத்த வண்ணம் குழந்தையைத் தேடுவாள் அந்தப் பட்டுமேனியைத் தொட்டுப் பார்த்ததும்பாதி மயக்கம் போன இடம் தெரியாது. மீதிப் பார்வையோ கண்ணாளனை தேடித்திரியும். கண்ணாளன் அவள் கண்களில் பட்டதும் அவள் கண்கள் பேசத் தொடங்கும். கண்ணாளன் கைகள நெத்தியிலிருந்து உச்சிவரை தடவிக் கொடுக்கும் போது பிரவச வேதனை விடை பெற்று விடும். அது இருவருக்கும் ஏற்படும் மவுனத்தின் நிம்மதி.

### நிம்மதி அருகில் போகின்றது

குழந்தைக்குத் தாயின் மடியோ சிம்மாசனம், அவளின் மடிமீது படுத்திருந்து மார்போடு குழந்தையை அணைத்து பாலூட்டும் போது தாயின் நெஞ்சிலுள்ள துன்பமெல்லாம் சங்கீதமாகும் குழந்தை பிறக்கும் போதே த்னது கை விரல்களை மூடிக் கொண்டே பிறக்கிறது. வலு வானகைகள் என்னிடத்திலுண்டு என உணர்த்துவது போனறும் உடும்பு போட எடுக்கும் முயற்சியும் தவழ எடுக்கும் முயறசியும் நிற்க எடுக்கும் முயற்சியும், நடக்க எடுக்கும் முயற்சியும், எமக்குப் பாடங்களாகப் போதிக் கப்படுகிறது. குழந் தையாக இருக்கும் சூழல் கொடுத்த நிம்மதி வளர்ந்த பின்னர் அருகிப் போனதன் மர்மம் என்ன?

தனிமனிதனாக இருந்தவன் சமூக மயப்படும் போது தனி மனித நிம்மதி, குடும்பநிம்மதி, சமூக நிம்மதி, இனநிம்மதி, உலக நிம்மதி அற்ற சூழலில் சிக்கி நிம்மதியற்றவர்களாக்கப் படுகிறார்கள். ஒதுங்கி வாழமுடியாது பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழப் பழகிக் கொள்கிறான் சுயமாகச் சிந்தித்தான். கூட்டாகவும் சிந்தித்தான். சமா தானமான வாழ்வுக்காக. வேண்டி நிற்கிறான்.

### கவிஞன் சுதந்திரமானவன்

நியாயமான கருத்துக்களுக்கு மனித நேயத்ததோடுமதிப்பளிக்க மறுப்பதும் சுய கௌரவங்களைப் பார்ப்பதும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணமுண்டு என நினைக்காத போக்கே சமாதான சீரழிவுக்கான முக்கிய காரணியாகும்.

சமாதானமாக வாழ்வதற்காகவும் நாம் நிம்மதியோடு வாழ்வதற்காகவும் அழைக்கிறான் பாரதி என்னும் மகாகவி, சிறுவயதில் பாட்டு எழுதும் ஆர்வம் அவரிடத்திலிருந்தது. காசியில் கல்வி கற்ற பாரதி எட்டைய புரமன்னன் அழைப்பை ஏற்று ஊர் வந்து சேர்ந்தார். புத்தி ஜீவிகளை அந்நாளில் மன்னர்கள் தம்பக்கம் வைத்துக் கொள்ளும் வழமை இருந்தது. கவிஞன் சுதந்திரமானவன் அவனை யாரும் கட்டிப் போட முடியாது. எட்டையபுரத்தை விட்டு வெளியேறினார்.

கவிஞன் என்று நினைக்கிற போது பாரதி வருவான். கவிதை என்று நினைக்கிறபோதும் அவனே வருவான். உயிர் வாழும போது இறந்தான் இறந்த பின்னர் வாழ்கிறான். அவனே மகாகவி பாரதி. மனிதனைப் பற்றி நினைத்தான் அவன் வாழ்வை நினைத்தான் பாட்டாக வடித்தான்.

சமாதான வாழ்விற்கான பாதையைப் போடத் தொடங்கினான் மனித வாழ்வில் இன்ப மிருக்கும் இடத்தில் துன்பமும் இருக்கும். இவற்றை எல்லாம் வென்று வாழ அவர் கூறும் மருந்து

**''மனதிலுறுதி வேண்டும்**
**வாக்கினிலே யினிமை வேண்டும்''**

### விரக்திமனோநிலை

தன்னம்பிக்கை ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். உறுதியான மனம் வேண்டும் தன்னைத தானே நேசிக்கத் தெரிந்தவனுக்கே இவை உரித்தானதாகும் சோகங்களைச் சுமந்து கொண்டு உலவிட முடியாது.

இரண்டு ஆங்கிலேயர்கள் சந்திப்பதாக வைத்துக்கொள்வோம். ஒருவர் மற்றவரைப்பார்த்து ஆங்கிலத்தில் ''எப்படிச் சுகம்?'' எனக்கேட்கும் போது மற்றவரோ ''நன்றாக இருப்பதாகக் கூறுகிறார்'' நம்மவர்களிடம் இதை எதிர் பார்க்க முடிகிறதா?

ஏதோ இருக்கிறோம்" என்றல்லவா கூறி விடுவார்கள் நன்றாக இருப்பதாகச் சொல்ல மனம் வருவதில்லை. தனக்காக வாழாத போக்கு ஒரு விரக்தியான மனோநிலையைத்தான் காணக்கூடியதாக இருக்கிறது

சோர்வோடும் மன உறுதியுமில்லாதிருக்கும் இந்த மனிதர்களைப் பார்த்து பாரதி பாடுகிறான்.

**''காக்கைகுருவி எங்கள் ஜாதி -நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம**
**நோக்கும் திசையெல்லாம் நாம் அன்றி**
**-வேறில்லை**
**நோக்க நோக்க களியாட்டம''**

என்ற சமரசஞானம் தானாகவே உதயமாகிறது. தத்துவ உணர்வு நிரம்பியஞானப் பாதை இதிலிருந்து பெறப்படுகிறது. சமாதானமாக வாழக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

**''உடன் பிறந்தோர்களைப் போலலே**
**இவ் வுலகில் மனிதரெல்லோரும்**
**இடம் பெரிதுண்டு வையத்தில் - இதில்**
**எதுக்குச் சண்டைகள் செய்வீர''**

என்றும்

**''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்- இங்கு**
**வாழும் மனிதருக்கெல்லாம் பறிற்றுப்**
**பல கல்வி தந்து- இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்''**

மனித சமூகத்திற்கு ஏற்ற வகையில் கல்வி இருக்க வேண்டும். ''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்''என்பது எல்லோருக்கும் சோறுபோடச் சொல்ல வில்லை. வறுமை என்பது இல்லாது இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. இவற்றை எல்லாம் சாகோதரத்துவம் நிறைந்த நாட்டில் தான் செய்ய முடியும் சண்டைகளே இல்லாத சமாதானம் நிறைந்த ஒரு உலகை அவர் எண்ணிப் பாக்கிறார்.

### கொள்கைப்பிடிப்புக் கொண்டவர்

காந்தி அவர்கள் ராஜாஜி அவர்களேடு சென்னையில் தங்கி அரசியல் சம்பந்தமான கலந்துரையாடல் நடத்திக் கொண்டிருந்த போது காவலரை மீறிக் கொண்டு நுழைந்தார் பாரதி. காந்தியிடம் கேட்டார் ''திருவெல்லிக்கேணி கடற்கரையில் கூட்டமொன்று இன்று இரவு இருக்கிறது. தாங்கள் தலைமை தாங்க வேண்டும்'' மெனக்கேட்டார். காந்தியோ அன்றைய இரவில் வேறு அலுவல்கள் இருக்கின்றன. கூட்டத்தை ஒத்திவையுங்கள் என்று கூற ''கூட்டத்தை ஒத்திப்போட முடியாது நான் வருகிறேன் என்றார் பாரதி அன்றைய தினந்தான் பாரதியை முதல் முதலாகக் காந்தியார் சந்தித்த நாளாகும்.

**''வாழ்க நீ எம்மான் இந்த வையத்து**
**நாட்டிலெல்லாம்**
**தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை**
**தவறிக் கெட்டுப்**
**பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத**
**தேசந்தன்னை**
**வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ**
**வாழ்க வாழ்க''**

இந்தப் பாட்டினை ஏன் இங்கே குறிப்பிட வேண்டுமெனில் தான் கேட்டபோது வராத ஒரு வரை வாழ்த்துகிறார். சாதாரண மனிதன் அல்ல பாரதி கொள்கைப் பிடிப்போடு வாழ்ந்தவர். உள் கட்சி மோதல்கள் ஏற்படும் காலத்தில் இப்படி ஒரு கவிஞன் வாழ்ந்தான்.

மீண்டும் காந்தியைப் பார்க்கிறார் அவரின் சாத்வீக அன்பு வழியைப் பார்க்கிறார். அரசியல் துறையில் பார்க்கிறார். அதே பொழுதில்நடந்து முடிந்த முதலாவது உலக யுத்தத்தையும் அதன விளைவாக உயிருக்கும் உடமைக்கும் ஏற்பட்ட படுமோசமான நாச வேலைகளை நினைக்கிறார். வாழ்வுக்கு உயிர் மூச்சு சமாதானமே என நினைத்து.

''தன்னுயிர் போலே தனக்கழிவெண்ணும் பிறனுயிர்த் தன்னையும் கணித்தல் மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம் கடவுளின் மக்களென்றுணர்தல்'' என்று பாடுகிறார்.

### சமத்துவம்

இன்னுயிர் தந்தது எம்மை ஈன்று வளர்த்து அருள் ஈந்தது மங்கையராய் இல்லறம் வளர்த்தது பெண். பெண்மையை போற்ற வேண்டும் பெண்களின் உறவுகள தர்மமுள்ளதாய் இருக்க வேண்டும் பெண்களை அடிமைகளாக நடத்தல் தவறு என்றெல்லாம் சொல்லுகிறார்.

சாதி முறையை ஒழிக்க வேணடும் மத வெறியைத் தணிக்க வேண்டும் என விரும்புகிறார். இவை அனைத்தும் மனித சமூகத்தின் சமாதானமான வாழவிற்கு ஊறு விளைவிப்பதாக இருக்கிறது என நினைத்து தாழ்ந்த சாதியில் பிறந்த கனக லிங்கத்திற்கும் காயத்திரி வேத மந்திரத்தைச் சொல்லி வைத்து வழிபடும் முறையையும் நன்றாகச் சொல்லிவைத்து ''பூணூல் ஒன்றினைத் தன் கைகளால் போட்டு இன்று முதல் நீ பிராமணன் எனச் சொல்லிவைத்தார் பிறப்பால் உயர்வுதாழ்வு இல்லை செயலால் தான் உயர்வு தாழ்வு உண்டு என உணர்த்தி கனக லிங்கத்தின் தாழ்வுச் சிக்கலை போக்கினார்.

புதுவையில் தனது குடும்பத்தோடு மாதாகோயிலுக்குப் போவர் ''காக்கா''கடைக்குச் சென்று தேனீர்குடிப்பார். அந்தக் காலத்தில் அது ஒரு பெரும்புரட்சியே முஸ்லிம்களைச் சந்தேகித்த காலம் சாதி வெறி, மதவெறி உள்ள கவிஞர் அல்ல எல்லாச் சமயமும் அவருக்கு ஒன்றாகத் தென்பட்டது.

**தொடர்ச்சி.........**

**(4ம் பக்கம் பார்க்க)**


**அன்பு வாசகர்களே!**

**வலம்புரியின் வாரமலர்**



**சங்கு நாதம்**

**ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரி இணைக்கப்படாமல் தனித்து ரூ.12/= விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்**

**தினசரி வெளிவரும் வலம்புரியின் விலையில் மாற்றமில்லை**

அறிஞர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்துவிட்ட சங்குநாதத்தை நீங்களும் வாசிக்கத் தவறாதீர்கள். இலங்கை பூராகவும் விற்கப்படும் சங்குநாதம் இனிமேல் உங்கள் உறவுகளுக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றது.

**சங்குநாதம்**

**வலம்புரியின் இணைப்பின்றி**

**ரூ. 12/= மட்டுமே.**

## நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரைமூலம் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த

# ஜனாதிபதியின் நல்லெண்ணம் வெளிப்பட்டுள்ளது

## கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)
அரசு மேற்கொண்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டியுள்ளார்.

இதற்கு அரசாங்கம் சாதகமான பதிலை விரைவில்தெரிவிக்க வேண்டும்என்று பொது ஜன ஐக்கியமுன்னணி ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா கடந்த வியாழக்கிழமை இரவு தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைகுறித்து கலாநிதி சரத் அமுனுகம நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார்.

அச்செய்தியாளர் மாநாட்டில்அவர்தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்.

இனப்பிரச்சினைக்கானஅடிமட்டப் பிரச்சினையை நன்கு தீவிரமாக ஆராய்ந்து அதற்குரிய அடிப்படையை நாம் கண்டுகொள்ள வேண்டும் அவ்வாறு செய்தால் தான்இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம்.

ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்துடன் இணைந்து கருமமாற்ற இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனை அரசு நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## நிதி ஒதுக்குவது தொடர்பாக

# பிரிட்டன் அமைச்சர் பிளயாட் டிசம்பரில் இலங்கை விஜயம்

(கொழும்பு)
வெளிநாடுகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதியொதுக்கும் விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரிட்டனின் அமைச்சர் பிளயாட் டிசம்பர் மாதம் இலங்கைக்கான விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ளார்.

தற்போது இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து நாட்டின் அபிவிருத்தி பணிகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள நிதி ஒதுக்கீடு தொடர்பாகவே இங்கு வருகை தரவுள்ளார்.

கடந்த 9 மாத காலங்களாக நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கென சர்வதேச நாடுகள பலவும் உதவி வருவது தெரிந்ததே. (உ-8)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ள வே. மாணிக்கனைப் பாராட்டும் விழா இன்று பி.ப. 3 மணிக்கு மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயத்தில் அ. அன்ரனி பிரசன்னா தலைமையில்இடம் பெறவுள்ளது. (உ)

## தென்கிழக்காசியாமுழுவதும் புலிகளின் குரல்வானொலி விஸ்தரிக்கப்படும்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரல், தென் கிழக்காசியா முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலும் இலங்கை முழுவதும் மட்டுமின்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. (உ-3)

## மாவீரர் நாள் கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)
வேலணை மண்கும்பான் சாட்டி மாவீரர்துயிலும்இல்ல புனரமைப்பு மற்றும் எதிர்வரும் நவம்பர் மாதம் அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும்30ஆம் திகதி பி.ப. 2.00மணிக்கு வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தீவக வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், கூட்டுறவுத்துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின்பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு தீவக மாவீரர் துயிலும இல்ல புனரமைப்புக் குழுவின் தலைவர் பூகனகலிங்கம கேட்டுள்ளார். (உ-75)

## இவ் வருட இறுதிக்குள் ஆணைக்குழுக்கள்அமைப்பு

### பேராசியர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)
சுதந்திரப்பொலிஸ்ஆணைக்குழு மற்றும் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு ஆகிய இரண்டும் இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

இவ்விரண்டு ஆணைக்குழுக்களிலும் இடம் பெறவுள்ள பிரதிநிதிகளின் பெயர்களை எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அரசியலமைப்புசபை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(மந்திகை)
இளந்தளிர் முன்பள்ளிவிளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு உடுப்பிட்டி சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

விழாக்குழுத் தலைவர் செ.சந்திரமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நவாலி தென்னிந்திய திருச்சபை அருள்தந்தை இ.ராஜ்குமார் பிரதமவிருந்தினராகவும், வீரபத்திர கோவில் பிரதமகுரு கனக சபாபதிக்குருக்கள், உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை அருட்தந்தை சுரேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)

## வவுனியா பெண் கொலை புளொட் தலைவர் பிரதமருக்கு கடிதம்

(வவுனியா)
வவுனியாவில் பாலியல் வல்லுறவுக்குப் பின் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்ணின் கொலை தொடர்பாக கண்டனம் தெரிவித்து, உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரும் கடிதம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்குபுளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் எம்.பி அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை, வவுனியாவில் உள்ள பெண்கள் அமைப்புக்கள் இக் கொடூர கொலையைக் கண்டித்து நாளை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி ஒருவரின் தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஆடு மேய்க்கச் சென்ற லூசியா அபுறான்பிள்ளை (வயது 43) என்ற பெண்மணி காணாமல் போனதும் புதன் கிழமை காலை ஈரற்பெரிய குளம் இராணுவ முகாம் அருகே சடலமாக கண்டு பிடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இவரது கொலை தொடர்பாக வவுனியா மாவட்ட பதில் நீதிவான் எம். சிற்றம்பலம் விசாரணைகளை மேற் கொண்டிருந்தார். (ம)

---

### பிறந்த திகதி

செய்த லும் கெட்ட பெயரெடுக்கு சூழ் நிலை அமைந்து விடுகிறது விதி சதா சதிசெய்யும் இதனால் 46 வருகிற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை படிப் படியாக உயரும்.

பெயர் நன்றாக அமையப் பெற்றவர்களுக்கு மேற் குறிப்பிட்ட கெட்ட பலன்கள் குறையும் ஆடம்பரமான சாமான்கள் விற்கும் தொழிலாலும், கலைத் தொழிலாலும், கைத் தொழிலாலும் மேன்மையான நிலையை அடைவர். மலைப் பிரதேசங்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு ரசிப்பர். ஆடம் பரப்பிரியராகக் காட்சியளிக்கும் இவர்கள் சிலநேரங்களில் வாழ்க்கையை வெறுத்தது போன்று இருப்பர் எதைக் செய்த லும் திருப்தியாகச் செய்யாதுகுழப்பமாகவே செய்வர் இவர்கள் தன்னுடைய பெயரை நன்றாகக் கீழ குறிப்பிட்டபடி மாற்றியமைத்துக் கொண்டால் வாழ்க்கை சிறப்படையும்,

### தொழில்

இவர்களுக்கு, ஆடம்பரப் பொருட்களை வியாபாரம் செய்வதன் மூலம் செல்வம் சேரும் ஜவுளிதொழிற்சாலை, கமிஷன் போன்ற தொழிலாலும் லாபம் அடையலாம்.

### நோய்

இவர்களுக்கு, மனவியாதி, இருதயவலி, மூட்டு வலி, பல், கண்நோய் போன்றவைகள் வரும் பெயரைச் சிறப்பாக அமைத்துக் கொண்டால் நிவர்த்தியாகும்

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கையில்பிறந்தவர்கள் 19 37 46 64;27, 36,45 போன்றசூரியன, செவ்வாய் ஆதிக்கத்தில் பெயரை மாற்றியமைத்துக் கொண்டு சிறப்பாக வாழலாம்

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-1,9, யோகமான தேதிகள் 1,10, 19,28;9,18,27,யோகமான மோதிரக்கல்- தங்கபுஷ்பராகம், கனகபுஷ்பராகம், வெள்ளை புஷ்பராகம்.யோகமன நிறம் வெளிர் நீலம், வெளிர் மஞ்சள். ஆகாத நிறம-இல்லை. ஆகாத தேதிகள-இல்லை.

### உடல்எண்-3 உயிர் எண்-7

3,12,21,30போன்ற தேதிகளில் பிறந்து,தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7 வருமேயானால் இவர்கள் குரு,கேது, ஆதிக்கத்தில் பிறந்தவர்களாவர் இவர்களது மனம் எப்பொழுதும் தனிமையைவிரும்பும்.பார்ப்பதற்கு ஓரளவு உயரமாக இருக்கும் இவர்கள் ஏகாந்தவாழ்க்கையையே விரும்புவர். பழமையும், புதுமையும் கலந்து காட்சியளிப்பர். கவர்ச்சியான முக அமைப்புக் கொண்ட இவர்கள எல்லோரிடமும் எளிதாகப்பழக மாட்டார்கள்.தான் பேசக் கூடியவைகளை முன்கூட்டியே தயார் செய்து வைத்துக் கொண்டு பின்பே பேசுவர்.

பிரச்சினைகள் வந்து விட்டால் அதிமான வாதங்கள் செய்து பேசிக் காரியத்தை வெற்றி கொள்வர் தேவையற்ற பேச்சுக்களை எப்பொழுதும் பேசமாட்டார்.

இவரது கொள்கைகள் மற்றவர்களுக்கு ஒத்துவராது இதனால் இவரைப்பற்றி மற்றவர்களுக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்து கொண்டிருக்கும் இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு நல்ல நண்பர்கள் அமைவது சிரமம். அவ்வாறு அமைந்து விட்டால் உயிரும் உடலும் போலஇருப்பர்.

முன்கோபியான இவர்கள் யார்தவறு செய்தாலும் தவறைச் சுட்டிக்காட்டிப் பேசுவர் தனக்கு வருகின்ற கஷ்டங்களைப் பிறரிடம் கூறாது மறைத்து விடுவர். கல்வி,கலை, ஆராய்ச்சி போன்றவைகளில் சிறந்த இவர்கள் எப்பொழுதும் எதையாவது சிந்தித்த வண்ணம் இருப்பார். உத்தியோகத்திலிருக்கும் சிலர் தனது ஓய்வு நேரங்களில் ஏதாவது சிந்தனை செய்தும், எழுதிக் கொண்டும் இருப்பர். தனது சக ஊழியர்களுக்கும், இவர்களுக்கும ஒத்து வராது, ஆராய்ச்சி மனப் பான்மை கொண்ட இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால், ஏதாவது புதிதாகக் கண்டு பிடிக்க முயல்வர்.

நாட்டுப் பற்றும், மதப்பற்றும் மிகுந்த இவர்கள் தன் நாட்டிற்கும், மதத்திற்கும் உண்மையாக உழைப்பர். ஆனால் எவ்வளவு உண்மையாக உழைத்தாலும் பிரயோசனமில்லை என்று கடைசியில் ஒதுங்கி விடுவர். தன்னைவிடப் பலம் வாய்ந்தவர்களாக இருந்தாலும் அஞ்சாது எதிர்ப்பர். குடும்ப வாழ்க்கையில் சிறிது குழப்பம் கொண்ட இவர்கள் தனது பிறந்த தேதிக்குப் பொருத்த மானதாகப் பெயரை மாற்றிக் கொண்டால், நன்மை கிடைக்கும்.

தனியாகத் தொழில் செய்யும் பலர் அதிகமாகப் பேசாத காரணத்தால், தொழிலை மிகவும் அபிவிருத்தியாக்க மாட்டார்கள். பிறரிடம் தனது கவலையை சொல்லிப் போக்கிக் கொள்ளாதவராகவும், தொழிலில் ஏற்படும் சிக்கல்களை அடுத்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாதவராகவும் இருப்பதால் தொழிலில் முன்னேற்றம் சிறப்பாக இருப்பதில்லை. இதனால் பிறந்த தேதிக்குப் பொருத்த மானதாகக் கீழே குறிப்பிட்டபடி பெயரைமாற்றிக் கொண்டால் நல்ல முன்னேற்றத்தை அடையலாம்.

### தொழில்

திரவப் பொருள், கல், மருந்து வியாபாரம், கல் சம்பந்தமான தொழில் போன்றவைகளினாலும் நல்ல முன்னேற்றம் பெற வாய்ப்பிருப்பதால், பெயரை நன்கு அமைத்துக் கொள்வது மேன்மையைக் கொடுக்கும்.

### நோய்

மன அமைதியின்மையால் மன நோய் வரலாம். பாரிச வாயு, அதிக உஷ்ண வியாதிகள், நரம்பு சம்பந்தமான வியாதிகள் வரலாம்.

### பெயர் அமைக்கும் முறை

இவர்களுக்குக் குரு ஆதிக்கமாகிய 21, 39 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமாகிய 14, 23, 32, 41, 50, 59, 77 போன்றஎண்களிலும்பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### பின் பற்ற வேண்டியவை

யோகமான எண்- 3,2, யோகமான தேதிகள்-3, 12 21,30; 2, 11, 20, 29; 5, 14, 23. யோகமான மோதிரக் கல்- எமிதிஸ்ட், வைடூரியம், யோகமான நிறம்- றோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம். ஆகாத நிறம்- சிவப்பு. ஆகாத தேதிகள்- 6, 15,24

(தொடரும்)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல்கடன்.

குறள்

# வலம்புரி

## கொல்வினின் தீர்க்கதரிசனம்

'ஒரு மொழியென்றால் இரண்டு நாடு, இரண்டு மொழியென்றால் ஒரு நாடு' என்று பாராளுமன்றத்தில் கூறிறியவர் காலஞ்சென்ற கொல்வின் ஆர்.டி.சில்வா முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்கள மொழித் தனிச் சட்டத்தைக் கொண்டுவந்த போது அந்த இனம் சார்ந்த ஒருவர் துணிந்து நின்று உண்மையை உரைத்தாரெனில் அவரிடம் காணப்பட்ட தீர்க்க தரிசனம் வியப்பிற்குரியது.

தனித்துச் சிங்களம் மட்டும் தான் ஒரு மொழியென்றால் அது நிச்சயம் இலங்கை பிரிவுபட்டு இரண்டு நாட்டை ஏற்படுத்தும். மாறாக சிங்களமும் தமிழும் இந்நாட்டில் இரு மொழிகள் என்றால் இலங்கை தொடர்ந்தும் இறைமையோடு, ஒருநாடு என்ற வரையறையோடு இருக்கும் என்ற கொல்வின் ஆர். டி. சில்வாவின் கருத்தை அன்றைய இனவாதம் மிஞ்சிப்போன சிங்கள ஆட்சியாளர்களால் ஏற்க முடியவில்லை.

ஆனால் இன்று அவரின் கருத்து எவ்வளவு தூரம் பொருந்துகிற தென்பதை ஆட்சியாளர்கள் மட்டுமன்றி முழுச் சிங்கள மக்களும் புரிந்து கொண்டுள்ளனர்.

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் 2ம் கட்டச் சமாதானப் பேச்சில் விடுதலைப் புலிகளின் படைத்தளபதிகளில் ஒருவரான கேணல் கருணாவும், அரசின் பக்கத்தில் இராணுவத் தளபதிகளில் ஒருவரான கொட்டகொடவும் கலந்து கொள்கின்றனர். எ-9 கண்டி வீதியில் நேருக்கு நேர் மோதிய இருதரப்புத் தளபதிகள் தாய்லாந்தில் சந்திப்பது தமிழினத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி எனலாம்.

இலங்கையில் சிங்கள இனம்வாழ்வதற்கு(ஆட்சிபுரிவதற்கல்ல)விடுதலைப் புலிகளின் தளபதிகளுடன் தான் பேசவேண்மென்ற நிலை ஏற்பட்டுள்ளதெனில் இதனைவிட தமிழினத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றி வேறெதுவுமாக இருக்க முடியாது.

அதாவது கொல்வின் ஆர்.டி.சில்வா கூறிய 'நாடு' என்பதை ஒரு மொழியென்றால் இருதளபதிகள், இரு மொழியென்றால் ஒரு தளபதி என மாற்றிக் கொள்வது சாலவும் பொருத்துடையதாகும்.

# தமது சீடர்களைத் தீமையினின்றும் காக்கும்படி
# இயேசு கடவுளிடத்தில் வேண்டிச் ஜெபித்தார்

## பரமபிதா காட்டிய பாதை



'இயேசு தம்முடைய கண்களை வானத்துக்குஏறெடுத்து பிதாவே வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளினயாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு மாமிசமானயாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரங் கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப் படுத்தும் படிக்கு, நீர்உம்முடைய குமாரனை மகிமைபடுத்தும். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன். நான் செய்யும் படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

### உம்முடையவைகள் என்னுடையவைகள்

நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத்தந்த மனுஷருக்கு உம்முடையநாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள். அவர்களை எனக்குத் தந்தீர். அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவருக்குக் கொடுத்தேன். அவர்கள அவைகளை ஏற்றுக் கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்கின்றேன். அவர்கள் உம் முடையவர்களாயிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள். உம்முடையவைகள் என்னுடையவைகள். அவர்களில் நான்மகிமைபட்டிருக்கிறேன்.

நான்இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள், நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே! நீர் எனக்குத்தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர்அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் அவர்களுடனே கூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினால் காத்துக்கொண்டேன், நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன். வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாக கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவரும் கெட்டுப்போகவில்லை. இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன். அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில்இருக்கையில்இவைகளைச் சொல்லுகிறேன்.

### சத்தியத்தினால் பரிசுத்தம்

நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன், நான்உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல. ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது, நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான்வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உமமுடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

நான் இவர்களுக்காகவேண்டிக்கொள்கிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அவர்களெல்லாம் ஒன்றாயிருக்கவும, பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக ,நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும், இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும் நீர்என்னிலும் இருக்கும் படி வேண்டிக் கொள்கிறேன்.

### நீதியுள்ள பிதா

பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருககிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்கவிரும்புகிறேன். நீதியுள்ள பிதாவே உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன். நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள். நீர் என்னில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன், இனியும் தெரியப்படுத்துவேன் என்று இயேசு தனது சீஷர்களுக்காக இறைவனை மன்றாடிச் ஜெபம் செய்தார். ●

யோவான் சுவிசேஷம்,

தொகுப்பு : **மதிவாணர்**

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து
# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

3, 12, 21, 30 போன்ற தேதியில் பிறந்தவர்களின் தேதி,மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் குரு, சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.தேவ குருவாகிய குருவும்,அசுர குருவாகிய சுக்கிரனும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகாததால் குருவாகிய 3.உடல் எண்ணாக வருகிறவர்களுக்கு சுக்கிரனாகிய6 உயிர் எண்ணாக வருவது சிறப்பல்ல.

இவர்கள் தன் நடவடிக்கையாலும், தன் வாயாலும் தனக்குத் தீங்கைத் தானே தேடிக்கொள்வர். இவர்களுடைய பெயர் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்தால் மிகவும் மேன்மையான நிலையை அடைவர். பொருத்தமற்ற பெயர் இருக்குமேயானால் காமவெறியாலும், பெண்களிடம் பழகுவதாலும் சிக்கல் ஏற்படும். சிலருக்கு உடன் பிறந்தவரிடத்தும், நண்டரிடத்தும் கருத்துவேறுபாடு உண்டாகும், தான் போட்ட திட்டங்கள் தோல்வியடையும்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் அரசாங்க உத்யோகத்திலிருந்தும் நிம்மதியின்றி வாழ்கின்றனர். தொழில் செய்வோர் ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றனர். ஆனால் பெயர் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் எல்லா வளமும் பெற்றுச் சிறப்பாக வாழ்வர். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பெண்ணாக இருந்தால் ஆண்களாலும், ஆணாக இருந்தால் பெண்களாலும் கவலைப்படும் சூழ்நிலை உருவாகிறது. இதனால் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளிக்கும் இவர்கள் காமத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு தீர்க்கமான யோசனையும், நல்ல அறிவும் இருக்கும், தீயகாரியங்களில் இறங்கிவிடுகின்றனர், சிலர் நல்லவர்களாக வாழ முயற்சி

( 8ம் பக்கம் பார்க்க)

## சோதிட பலன்

**ஆர். ஐ. துரைமுருகர்**

## தினசரி தியானம்

### நம்பிக்கை

பயம் என்பது பலவீனத்தின் ஏற்கத்தக்க அறிகுறியாகும். நீங்கள் எதற்கும் எப்போதும் அஞ்சக் கூடாது. உங்கள் மேல், உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். உடல், மனம் இரண்டிலும் தைரியமும் வல்லமையும் உடையவராக வளர வேண்டும். நம்பிக்கை பாதி வெற்றி தரும் என்று சொல்வார்கள். வேகமாகவும் சரியாகவும் வேலை செய்ய இது உதவுகிறது. ஆகவே நம்பிக்கையுடன் தயாராகுங்கள் நிச்சயமாய்த் தேர்வுகளில் நன்றாக முழு வெற்றி பெறுவீர்கள்.

சுவாமி சிவானந்தர்

# செச்சினியத் தீவிரவாதிகளால் பணயம் வைக்கப்பட்ட சுமார் 700 பேரை ரஷ்ய அதிரடிப்படை மீட்டது

## 34 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர், 67 பணயக் கைதிகள் பலி

(மொஸ்கோ)

ரஷ்யதலைநகர் மொஸ்கோவில் உள்ள கலையரங்கில் செச்சினியத் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 700 பேரை ரஷ்ய கொமாண்டோக்கள் நேற்று அதிகாலை அதிரடி நடவடிக்கையின் மூலம் விடுவித்துள்ளார்கள்.

சுமார் 40நிமிடம் நீடித்த முயற்சியை அடுத்து கலையரங்கில் பிணைக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்களை அதிரடிப் படையினர் விடுவித்தனர். இந்த அதிரடி நடவடிக்கையின் போது 67 பிணைக்கைதிகள் கொல்லப்பட்டனர்.

திடீரென கலையரங்கை சுற்றி வளைத்த ரஷ்ய கொமாண்டோக்கள் மயக்கத்தை ஏற்படுத்தும் வாயுவை அரங்கினிற்குள் செலுததினர். பின்னர் உள்ளே நுழைந்த ரஷ்ய கொமாண்டோக்கள் துப்பாக்கியால் சுட்டனர். இந்த சண்டையின் போது செச்சினியத் தீவிரவாதிகளின் தலைவன் உட்பட 34 தீவிரவாதிகள் இறந்தனர். இருவர் கைது செய்யப்பட்டதுடன் ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இந்த அதிரடி நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட 37 குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டது. இதே வேளை பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த 74வெளிநாட்டவர்கள் பாதுகாப்பாக மீட்கப் பட்டனர்.

செச்சினியாவில் மேற்கொள்ளும் போரை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அங்கிருந்து ரஷ்யப் படைகளை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கிளர்ச்சிக்காரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இக் கோரிக்கைகள் நேற்று காலைக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் பிணைக்கைதிகள் கொல்லப்படுவார்கள் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### அரசு - புலிப்பிரதி நிதிகள்....

...தைகளில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் கலந்து கொண்ட அமைச்சர்கள் ஹக்கீம், மிலிந்த மொறகொட, சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோர் 30 திகதி புதன் கிழமை தாய்லாந்திற்கு புறப்பட்டு செல்லவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் புனர்வாழ்வு நிபுணர் ஜோர்ஜ் மகேஸ்வரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோர் 30ந் திகதி தாய்லாந்துக்குப் பயணமாகவுள்ளனர்.

இவர்களது தாய்லாந்துப் பயணத்துக்கான ஒழுங்குகளை மேற்கொணடுள்ள நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், தூதரக அதிகாரி தோமஸ் ஸ்ராங்கிளின் ஆகியோர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை வன்னியில் இருந்து விசேட உலங்கு வானூர்தி முலம் அழைத்துச் சென்று பின் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் ஊடாக தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக நோர்வே தூதர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

### அவசர கூட்டம்

(சுதுமலை)

யாழ் உள்ளுராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உள்ளுராட்சி உதவியாளருக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் இக் கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளதால் அனைத்து உள்ளுராட்சி உதவியாளர்களையும் தவறாது சமுகம் தருமாறு யாழ் மாவட்ட உள்ளுராட்சி உதவியாளர் சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.(த-252)

### பாராளுமன்றை...

அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் பணிகள் பாதிக்கப்படாத வகையில் செயணிக் குழு அமைப்பதாகத் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களுக்கான தனியான அலகு அமைக்கப்படுவது தொடர்பாக உடனடியாக எதுவும் கூற முடியாது என்றும், இதனை ஆராய்ந்த பின்பே அது பற்றிக் கூறமுடியும் என்றும் தெரிவித்த பிரதமர் ரணில் இவ் விடயங்கள் தொடர்பாக தனக்குள்ள கஷ்ட நிலைகளையும் பிரச்சினைகளையும் விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### தற்கொலைத்...

ஜெகான் பெரேரா, றொகான் எதிரிசிங்கா ஆகியோர் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது அமைச்சர் டொனால்ட்காம்ப் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் தற்கொலைக் குண்டு தாக்குதல்களை மேற்கொள்வதில்லை என்ற உறுதி மொழியைத் தருவார்களானால் அவர்கள் மீதான தடையை அமெரிக்கா நீக்குவதற்கு பெரும் உதிவியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இதனை அடுத்து தமிழ்க்கட்சி தலைவர்கள் அமைச்சர் டொனால்ட் காம்ப்பிடம் தற்போதைய சமாதான சூழ்நிலையில் சமாதானத்தைக் குழப்பக் கூடாது என்றும், அதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் டொனால்ட் காம்ப் நேற்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ஹக்கீம் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார். இதன் போது சமாதானப் பேச்சுவார்த்தையைப் பாதிக்காத வகையில் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளும் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் டொனால்ட் காம்ப்பிடம் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் டொனால்ட் காம்ப் தனது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றுள்ளார். (ம)

### லொறி குடை சாய்ந்தது

(யாழ்பாணம்)

கொழும்பில் இருந்து பொருட்களை எற்றி வந்த லொறி ஒன்று யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கிக்கிளைக்கு முன்னால்நேற்று குடை சாய்ந்தது.

தொலைபேசி இணைப்புக் களை விஸ்தரிப்பதற்காக யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வெட்டப்பட்ட கிடங்கில் லொறியின் சில்லு இறங்கியதாலேயே இச்சம்பவம் இடம பெற்றுள்ளது.

இச் சம்பவத்தை அடுத்து அவ் வீதியில் சில மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. (த-6)


தனிஸ் ரெக்ஸ்

சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த வேளையில் தணிஸ் ரெக்ஸ் ஸ்தாபனத்தின் மாபெரும் மலிவு விற்பனை

| | பழைய விலை | மலிவு விலை |
|---|---|---|
| சாறி | 450/= | 380/= |
| **சேட் வகைகள்** | | |
| ராடோ | 550/= | 400/= |
| சயினா BOX சேட் | 750/= | 350/= |
| பிளேன் BOX சேட் | 550/= | 320/= |
| 5வயது தொடக்கம்10வயதிற் குரியவர்களுக்கான சேட் | 150/= | 90/= |
| மாட்டின் சேட | 550/= | 200/= |
| டைட்டானிக் சேட் | 550/= | 200/= |
| GIORGIO சேட் | 350/= | 170/= |
| சோக்கோ ரவுசர் | 1100/= | 600/= |
| துணி பிறின்ட் | 120/= | 90/= |
| 3 வயது தொடக்கம் 8வயதுக் குரியவர்களுக்கான கவுண் | 950/= | 400/= |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

பிளவுஸ் பீஸ் வகைகளுக்கும், பிறின் பிளேன் துணிகளுக்கும் என பிரத்தியேக காட்சி அறை மேல்மாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

[C/5180]



தீபாவளிப் பரிசுப் போட்டி

சுந்தர்சன்

மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்

உள்ஞூரிலேயே மக்கள் சேவையை சிரமேற் கொண்டு கடந்த 22 ஆண்டு காலமாக

- மின்சார உபகரணங்கள்!
- P.V.C. நீர்க்குழாய்கள், இணைப்புகள்!
- அலங்காரப் பொருள்களை நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள:

சுந்தர்சன்
மானிப்பாய்

தீபாவளி - 2002 பரிசுப் போட்டியின் விபரம்:-

25.10.2002ஆம் திகதியிலிருந்து 06.11.2002ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் எமது ஸ்தாபனத்தில் அதிகூடிய தொகைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யும் :-

* வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கும்
* மூன்று வர்த்தக பிரமுகர்களுக்கும்
* கட்டட ஒப்பந்தகாரர்கள் மூவருக்கும்
* மின் இணைப்பாளர்கள் அறுவருக்கும்

அதிசயிக்கத்தக்க பெறுமதி வாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!!

மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி,
மானிப்பாய்.
TELE PHONE / FAX : 222 2751

சுந்தர்சன்
உரிமையாளர்

[C/5179]



வீட்டில் இருக்கும் முதியோரை நோயாளரை பராமரிக்கும் சேவை

உங்கள் உற்றார் உறவினரைப் பராமரிக்க வீட்டில் ஒருவர் இல்லையே! என்ற கவலையா?

கவலையை விடுங்கள்!

இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளில் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு ஆதரவுதரக் கரம் நீட்டி காத்திருக்கிறது.



உடனே தொடர்பு கொள்ளுங்கள்:
1வது மாடி
173 , ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்
T.P - 222- 2310

சிலிங்கோ கூட்டு நிறுவனம்
சிலிங்கோ வீட்டுத்தாதிய பராமரிப்புச் சேவை

[C/5178]



மீண்டும் யாழ் நகரில் தரமான சைவ உணவு வகைகளுக்கு

ஸ்ரீ நிகேதபவன் (விஷ்ணு விஹார்)

இல. 163 மின்சார நிலைய வீதி பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

[C/5177]


இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.